பக்கங்கள்-16 | 18.மார்ச்.2022 | விலை–50.00



பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்

THINAPPUYAL


REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06








மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –394


# போதைப்பொருள் பாவனையாளர்களை என்கவுன்டரில் சுட்டுக்கொல்லுங்கள்



# தமிழர் தரப்பின் தமிழ் தேசியம் எங்கே செல்கின்றது? என்னவாகப் போகின்றது?



# ரணில் விக்கிரமசிங்கவின் காய் நகர்த்தல்



# போதைப்பொருள் பாவனையாளர்களை என்கவுன்டரில் சுட்டுக்கொல்லுங்கள்

## அனுமதி அளிப்பாரா ஜனாதிபதி?



நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டுகளில் போதைப்பொருள் வியாபாரம் என்பது மட்டுப்படுத்தப்பட்ட தொன்றாகவே இருந்து வந்தது. ஆனால் யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகள் கடந்த நிலையில் குறிப்பாக வடகிழக்கிலும் போதைப்பொருளின் பாவனை அதி தீவிரமடைந்து வருகின்றமை மக்கள் மத்தியில் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது. போதைப்பொருள் தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஐஸ் போதை மற்றும் கரோயின் பாவிப்பவர்கள் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் ஏனைய பாவனையாளர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்படும் என்றும் இது தொடர்பில் சட்டங்கள் வலுவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தாலும் போதைப்பொருள்கள் அல்லது கேரளகஞ்சா ஐஸ் போதை போன்றவை இந்த நாட்டிற்குள் எப்படி வருகின்றது?, பாடசாலை மாணவர்கள் மத்தியில் பாவனை எவ்வாறு அதிகரித்தது?, இது வரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்?, அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதா? சமூக ஆர்வலர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் மருத்துவர்கள் என்று இதனை ஒரு வியாபார மயமாக்கல் ஏற்படுத்தியுள்ளமை தற்பொழுது கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக கடல் மார்க்கமாக வரக்கூடிய போதைப்பொருட்கள் கேரள கஞ்சா குடு இரண்டையும் ஏன் இலங்கை அரசினால் இது வரை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியவில்லை. கடலில் வைத்து பிடிபடுகின்ற போதைப்பொருட்கள் மாதத்திற்கு இரண்டு தடவைகள் மட்டுமே பெரிதாக பேசப்படுகின்றது அதன் பின்னர் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களுக்கு நடந்தது என்ன என்ற விபரமும் இதுவரை இல்லை. எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் எத்தனை பேர் சிறை வைக்கப்பட்டார்கள் என்ற விபரங்களும் இதுவரை வெளிவரவில்லை.

குறிப்பாக தற்பொழுது பாடாசாலை மாணவர்கள் மத்தியில் குறித்த போதைப்பொருள் பாவிக்கப்படுவது ஒரு துர்ப்பாக்கியமான நிலையாகவே மாற்றப்பட்டுள்ளது. மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் என்போரினால் பல்வேறு கூட்டங்களை நடத்தி வருகின்ற போதிலும் தற்பொழுது போதைப்பொருள் பாவனையானது எல்லைமீறி இடம் பெறுகின்றது. இதற்கு முற்றுமுழுதாக அரசதரப்பு பதில் கூறியே ஆக வேண்டும். கொரோனா வைரசின் தாக்கத்தை அடுத்து இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி அதனுடன் மக்கள் சந்தித்த துயரங்கள் இலங்கையை தற்பொழுது பாரிய கடன் சுமைக்குள் வீழ்த்தியுள்ள அதே நேரத்தில் அதிலிருந்து மீள்ச்சி பெறுவதற்கு விவசாயத்தை மேம்படுத்துவதற்கு பதிலாக கஞ்சா உற்பத்திகளையும் கரோயின் பாவனைகளையும் இலங்கை அரசு மறைமுகமாக கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றதா என்ற சந்தேகங்களும் தற்பொழுது வலுப்பெறுகின்றது. மாற்றத்தை நோக்கிய பாதையில் செல்ல வேண்டிய இலங்கை தீவானது இந்த ஆண்டில் போதைப்பொருள் வியாபாரத்திலும் பாவனையிலும் தீவிரம்காட்டி வருகின்றது என்பது வேதனைக்குரிய விடயம். தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில் வடக்கு கிழக்கில் எவரும் போதைப்பொருள் பாவித்ததாக வரலாறு இல்லை. ஒழுக்கமான கட்டுப்பாடுகள் இருந்ததே அதற்கான காரணமாகும்.

பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பாரிய சிக்கல்களை சந்தித்துள்ள அதேநேரம் அதற்கு மேலாக பெற்றோர்களை மேலும் துயரத்தில் ஆழ்த்துகின்ற சம்பவங்கள் நடந்து வருகின்றது. பாடசாலையை அண்மித்த இடங்களில் போதைப்பொருட்களை வீசிச்செல்லுகின்ற விடயங்களும் மறைமுகமாக மாணவர்களிற்கிடையில் ஐஸ் போதைப்பொருளை வழங்கும் நிலையும் அரசு கட்டுப்படுத்த தவறினால் இந்த நாட்டில் வன்முறையாளர்கள் பெருகுவதற்கு அரசாங்கம் வழிவகுக்கின்றது என்றே கூற வேண்டும். போதைப்பொருள் பாவனை தொடர்பான முழுமையான தகவல்கள் இதுவரை அரச தரப்பினால் வெளியிடப்படவில்லை. ஆனால் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது என்றே தகவலே வெளி வருகின்றது. இவ்வாறு ஊடக ரீதியாக இதனை தெரிவித்து போதைப்பொருள் பாவனை இல்லாத இடங்களிலும் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிக்கும் ஒரு விளம்பர உத்தியாகவும் இதனை கருதமுடியும். மெக்சிகோ நாடு என்பது போதைப்பொருள் வியாபாரத்தில் அதிவேகமாக ஈடுபடுகின்றது. இது சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. 20 வயதில் ஐஸ் போதைப்பொருளுக்கு ஒருவர் அடிமையாவதாக இருந்தால் 5 அல்லது 10 வருடங்களில் அவரது உடல் நிலை கூனிகுருகிப்போகின்றது அல்லது முக உபாதைகள் ஏற்படுகின்ற நிலைமை தோற்றுவிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி குறித்த ஐஸ் போதைப்பொருள் பாலியல் உணர்வுகளை தூண்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வயது வவித்தியாசமின்றி இப்போதைப்பொருளை உட்கொள்ளபவர்கள் நடந்துகொள்ளும் விதம் மிகவும் கீழ்த்தரமாக அமைந்துள்ளது.

அண்மைக்கால பதிவுகளை எடுத்துக்கொண்டால் 16 வயது தொடக்கம் 35 வயது வரையிலான ஆண் பெண் இருபாலாரும் இதனை பாவித்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. வேலியே பயிரை மேய்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைமை தற்பொழுது காணப்படுகின்றது. போதைப்பொருள் பாவனையாளர்கள் கையும் களவுமாக பிடிபடுகின்ற பொழுது அவர்களை சட்டத்துறை விடுதலை செய்வதாக அரசதரப்பு குற்றம் சாட்டுகின்றது. இவ்வாறான போதைப்பாவனையாளர்கள் தப்பி செல்ல அரசதரப்பு வழிவகுக்கின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

ஒரு சமுதாயம் பாதிக்கப்படுகின்றது என்ற உணர்வற்றவர்களாக வைத்திய துறை, சட்டத்துறை, காவல் துறை செயற்படுமாக இருந்தால் இதனுடைய உச்சபட்ச எதிரொலிப்பே இந்த நாட்டில் சட்டத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை மறுபக்கத்தில் எடுத்துக்காட்டுகின்றது. நாட்டின் ஜனாதிபதி அவர்கள் துரிதகதியில் போதைப்பொருள் பாவனையில் இருந்து இந்த நாட்டை மீட்டெடுக்க முன்வரவேண்டும். அதே நேரம் இனப்பிரச்சனைக்கான தீர்வு, காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் என்ற முக்கியமான வேலைத்திட்டங்களும் இருக்கின்றது.

குறித்த இளம் சமுதாயத்தினரை குறிவைக்கின்ற போதைப்பொருள் விற்பனை மாபியாக்கள் என்கவுன்டரில் சுட்டுக்கொள்வதனூடாக இந்த நாட்டை போதைப்பொருள் பாவனையற்ற நாடாக கொண்டு வர முடியும் என்பதே இன்றைய நிலைப்பாடாக காணப்படுகின்றது. இந்தோனேசியாவிலும், தாய்லாந்திலும் போதைப்பொருள் பாவனையாளர்கள் பலர் என்கவுன்டரில் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். அதே போன்று அரபு நாடுகளிலும் குறித்த பாவனையாளர்கள் மக்கள் முன் நிறுத்தி தூக்கிலிடப்படுகின்றார்கள். அது போன்று இலங்கை அரசும் அதற்கான அனுமதியை உடனடியாக வழங்க வேண்டும். அல்லது போனால் எதிர்வரும் மக்களின் இலங்கை தீவானது போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையில் சிறந்தவொரு தீவாக மாறுவதில் மாற்றுக்கருத்தில்லை. அத்தோடு இத்தீவில் வாழும் மக்களும் போதைப்பொருளுக்கு அடிமைகளாக வாழுகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். எனவே மத வழிபாடுகளையும் மத அனுஸ்டானங்களையும் அதிகளவில் அரசு அனுமதிக்க வேண்டும். விளையாட்டு துறையை ஊக்குவிக்க வேண்டும். யோகா பயிற்சிகளை மக்களுக்கு வழங்க வேண்டும். கட்டாய உடற்பயிற்சிகள் மக்களிடையே கொண்டுவரப்பட வேண்டும். அப்பொழுது தான் எதிர்வரும் சந்ததியினர் சிறந்த நாட்டு பிரஜைகளாக வெளிவருவதற்கு ஊன்று சக்திகளாக அமையும்.




**சத்திரியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை சீர்குலைக்க சதி

இன்றைய அரசியல் பரப்பில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய ஒரேயொரு கட்சியாக தமிழ் தேசிய கூட்டமைப்பு காணப்படுகின்றது. இதனை இல்லாதொழிக்கும் நோக்கோடு அரசு பல தமிழ் கட்சிகளை உள்ளிறக்கி மிக நூதனமாக செயற்படுத்தி வருகின்றது. அதற்கேற்றாட்போல் தமிழரசுக் கட்சியும் தமக்கிடையிலான தீர்மானங்களின் போது தம்மோடு இணைந்து செயற்படும் கட்சிகளை ஓரங்கட்டுகின்ற ஒரு செயற்பாட்டையே அண்மைக்காலமாக நிகழ்த்தி வருகின்றது.

பாராளுமன்ற தேர்தலில் பாரிய பின்னடைவை சந்தித்த தமிழரசுக் கட்சி ஆயுதக் கட்சிகளை தம்மோடு இணைத்து போட்டியிடுவதன் ஊடாக தமது தனித்துவத்தை இழந்து விடுவோம் என்ற தோரணையில் பேசி வருகின்றது. ஆனால் ஆயுத கட்சிகளின் வலிமை புரியாதவர்களாக கருத்துக்களை கூறிவருவது என்பது முட்டாள்தனமான விடயமாகும். தமது தேவைக்காக மட்டும் ஆயுத கட்சிகளை பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களை இவர்கள் உருவாக்கிக்கொண்டு பின்னர் அவர்களை கைகழுவிவிடுகின்ற அரசியலையே இதுவரை தமிழரசுக் கட்சி செய்து வந்திருக்கின்றது. விடுதலைப்புலிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியதன் நோக்கம் திசைமாறி சென்றுள்ளது.

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை போன்றவற்றை அரசியல் ரீதியாக கட்டி காப்பதற்கு உருவாக்கப்பட்டதே தமிழ் தேசிய கூட்டமைப்பு. 22 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு தற்பொழுது 10 ஆசனங்களுடன் செயற்பட்டு வருகின்றது. இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணி, சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி போன்றவை தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகின்றன. உண்மையில் இவர்கள் ஒரு குடையின்கீழ் நின்று போட்டியிடுபவர்களாக இருந்தால் 22 ஆசனங்களை வெல்ல முடியும். அத்தோடு நிர்ணயிக்கப்படுகின்ற தமிழ் தேசிய இலக்கையும் அடைய முடியும். ஆனால் பேரம் பேசும் அரசியலாகவே தமிழ் தரப்பு தற்பொழுது மாறியிருக்கின்றது அரச தரப்புடன். அது எவ்வாறெனில் தமிழ் தேசிய கூட்டமைப்பை சின்னா பின்னப்படுத்துவதாகும். தற்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் கருத்து மோதல்கள் உருவாகிய வண்ணம் இருக்கின்றது. இதனை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோனதிராஜா கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும்.

அரசு தனது தேவைக்கான நிலைப்பாட்டை தற்பொழுது கையில் எடுத்திருக்கின்றது. கட்சிகளின் தன்மைக்கேற்ப அவர்களை விலைபேசி இல்லாதொழிக்கின்ற ஒரு நடவடிக்கை அதுமட்டுமன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் பல கட்சிகளை உருவாக்கி அதில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பை ஓரங்கட்டுவதற்கான நடவடிக்கை.

இப்படி அரச தரப்பு அரசியல் கால நீரோட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பை இல்லாதொழித்து விட்டால் ஒரு தேசிய அரசாங்கம் அமைத்துக்கொள்ளும் பொழுது இதர கட்சிகளை பேரம்பேசி ஆளுங்கட்சி அல்லது எதிர் கட்சி இரண்டு தரப்போடும் இணைந்து செயற்படுவதற்கு வாய்ப்புக்களை வழங்குகின்ற ஒரு செயற்பாடாகவே இதனை பார்க்க முடிகின்றது. அவ்வாறு நிலைமை உருவாக்கப்பட்டாலும் அதில் ஆச்சர்யப்படுவதற்கும் ஒன்றுமில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமையை கைவிடுகின்றதோ அன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லாமல் போகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

199

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



## எறிகணை செலுத்துநரின் தந்திரங்கள்

சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களின் படைப்பிரிவுகள் பாரியளவில் கையெறிகணை செலுத்திகளைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதனைக் குறிப்பிட்டேயாக வேண்டும். ஆப்கானிஸ்தானில் ஒன்றிணைந்த முஜாகுதீன் படைகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட பாரிய ஆர்.பி.ஜி. - 7 பயன்படுத்தல் அனுபவம் பிற ஆயுத்துமிக்க நெருக்கடியான பிரதேசங்களில் பெரியளவில் பயன்படுத்தப்படுகின்றது. கனரக வாகனமயமாக்கப்பட்ட பிளாட்டூனிற்கு உத்தியோகபூர்வமாக 3 ஆர்.பி.ஜி. - 7 உம், ஸ்பெற்னாஸ் குழுவிற்கு ஒன்றும் வழங்கப்பட்டிருந்த போது சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களின் மொத்த ஆளணியில் 50 - 80% வரையானோர் ஆர்.பி.ஜி இனைப் படைக்கலன்களாகக் கொண்டிருந்தனர். ஆட்டிலறி பற்றாக்குறையாக இருக்கின்ற சூழ்நிலைகளில் சமர் நடவடிக்கைகளுக்குரிய ஆட்லறி ஆதரவிற்கான மேலதிக பணி ஆர். பி.ஜி. இடம் கொடுக்கப்படுகின்றது. சில வேளைகளில் ஆட்லறியை விட இது மிகவும் வினைத்திறன் மிக்கதாக இருந்திருக்கின்றது. சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களில் சமரில் செறிவான சூட்டை வழங்குவதற்கென எறிகணை செலுத்துநர்களைக் கொண்ட சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இதையொத்த குழுக்களுடன் எங்களது படைவீரர்களும் அதிகாரிகளும் ஆப்கானிஸ்தான், தஜிகிஸ்தான், செச்னியா போன்ற இடங்களில் முட்டுப்பட்டிருந்தார்கள். இவ்வாறான குழுக்களின் தந்திரோபாயச் சிறப்பியல்பாக விளங்கியது யாதெனில் 2 - 3 உம் இதற்குக் கூடுதலானதுமான ஆர்.பி.ஜி எறிகணைகளின் தொடர்ச்சியான ஒருங்குவித்த சூடுகளால் கவசவாகனங்களிலுள்ள ஒற்றைக் கவசவாகனம் இலக்காகத் தெரிவு செய்யப்பட்டு அதன் மீது 20 - 50 மீற்றர் வரையான தூரத்திலிருந்துதாக்கப்பட்டதாகும். இவ்வாறான சூட்டுக்கு மேலதிகமாகப் பொருத்தப்படுகின்ற காப்புக்கள் கூடத் தாக்குப்பிடித்துப் பாதுகாப்பளிக்க மாட்டா. பாதுகாப்பமைப்பு முதலாவது சூட்டில் தகர்க்கப்படுகின்றது. இதன்பின் கவசவாகனத்தின் பலவீனமாக இடத்தில் எறிகணை செலுத்துநர்கள் தாக்கி அதனை அழிக்கின்றனர்.

சட்டபூர்மற்ற ஆயுதக்குழுக்களின் எறிகணை செலுத்துநர்கள் திறந்த வெளியிடத்தில் இருக்கின்ற ஆளணியை அழிப்பதற்காகவும் ஆர்.பி.ஜிக்களைத் தீவிரமாகப் பயன்படுத்துகின்றனர். ராங்கியெதிர்ப்பு எறிகணைகளைப் பயன்படுத்தும் போதும் நான்கு மீற்றருக்குட்பட்ட சுற்று வட்டத்திலிருக்கின்ற ஆளணி சிதறுசன்னங்களாலும் வெடிப்பதிர்வலையாலும் அழிக்கப்படுகின்றது. இது தவிர ஆப்கானிஸ்தானில் சிதறு சன்னங்களைக் கொண்ட எகிப்திய சீனத் தயாரிப்பு ஆர்.பி.ஜி. - 7 இற்கான எறிகணைகளை முஜாகுதீன்கள் பயன்படுத்தினர். தஜிகிஸ்தானிலும் இவ்வாறான எறிகணைகள் ஆளணிகளுக்கு எதிராக மாத்திரமன்றிக் கவசவாகனங்களுக்கு எதிராகவும் (அதிலுள்ள அவதானிப்புச் சாதனங்களை அழிப்பதற்காக) பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. செச்னியாவில் சுய தயாரிப்புச் சிதறுசன்னங்களைக் கொண்ட எறிகணைகள் பயன்படுத்தப்பட்டதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது செச்னியர்கள் ராங்கியெதிர்ப்பு எறிகணையின் தலைப்பகுதியில் முட்கம்பிகளால் சுற்றினர் அல்லது சன்னங்களைக் (உலோகக் குண்டுகள்) காவலி நாடாவினுதவியால் ஒட்டினர். இதுதவிர ஆர்.பி.ஜி. இனால் பாரியளவில் ஆளணிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலால் அவர்களின் உளவுரனும் பாதிப்படைகின்றது. எங்களது ஒவ்வொரு சூட்டிற்கும் அல்லது தொடர் சூட்டிற்கும் போராளிகள் தரப்பில் பதிலுக்கு 2 - 3 எறிகணைகள் ஏவப்பட்ட சம்பவங்களும் உண்டு.

சூட்டை மேற்கொள்கின்ற தருணத்தில் எறிகணை செலுத்துநரின் சூட்டுநிலை சுவாலை வெண்தூசிப் புகை போன்ற பண்புகளால் வெளிக்காட்டப்படுகின்றது. எறிகணையின் உந்தல் தொகுதியின் செயற்பாட்டினால் எறிகணை பறக்கும்போதும் நன்றாகத் தெரியும். சமர்க்களத்தில் நீங்கள் இவ்வாறான சுவாலையையும் எறிகணையின் பறப்பையும் அவதானித்தால் அவசியம் 'சுவாலை படு' என்ற கட்டளையை வழங்கவேண்டும். இக்கட்டளை கிடைத்ததும் உங்களுக்குக் கீழுள்ளவர்கள் தரையோடு படுத்துக்கொண்டு (மறைப்புக்களிற்குப் பின்னால்) கைகளால் காதுகளைப் பொத்த வேண்டும். இவ்வாறான வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுமானால் ராங்கியெதிர்ப்பு எறிகணை அருகில் வெடித்தாலும் நீங்கள் திறந்த காப்புக்களற்ற சமதரைப் பிரதேசத்தில் இருந்தாலும் எதுவித சேதாரமுமில்லாமல் உயிருடன் தப்பும் வாய்ப்பு அதிகமாகும்.

ஏறிகணை செலுத்துநரின் சூட்டு நிலையை ஒழுங்கமைக்க நேரம் இருக்குமானால் (எடுத்துக்காட்டாக பதுங்கித் தாக்குதலிற்குத் தயார்ப்படுத்துகின்ற போது) தரையில் புழுதி எழும்புவதைத் தடுப்பதற்காக எறிகணை செலுத்தியின் பின்பகுதியிலிருந்து 2 - 4 மீற்றர் தொலைவிற்கு தரையில் நீரை ஊற்ற வேண்டும். எறிகணை செலுத்தியின் சூட்டு நிலையை உயர்ந்து வளர்ந்த பற்றைகள் (2 மீற்றர் வரையான) கற்குவியல்கள் சோளக் கொல்லைகள் பிற புல்லையொத்த வளரிகள் போன்றன நன்றாக உருமறைக்கின்றன. ஆனால் நினைவில் கொள்ளுங்கள் சூட்டுத் திசையில் எறிகணையின் பறப்புக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய வளரிகள் இருக்கக்கூடாது (பற்களிலும் கொப்புக்களிலும் எதிர்ப்படுகின்றபோது எறிகணை வெடிப்பதைத் தவிர்ப்பதற்காக வெடிப்பியின் பாதுகாப்பு மூடியைக் கழற்ற வேண்டாம்).

மலைச் சாய்வுகளிலும் கட்டடங்களின் உயர் மாடிகளிலும் இருக்கின்ற சூட்டு நிலைகளை ஒடுக்குவதற்காக அந்த மறைப்புக்களுக்குச் சற்று மேலே ஆர். பி.ஜி இனால் சூட்டை மேற்கொள்கின்ற முறை பயன்படுத்தப்படுகின்றது. இதன் போது எதிரிக்கு எறிகணை வெடிப்பின்போது தோன்றுகின்ற சன்னங்களாலும் வெடிப்பதிர் வலையாலும் மாத்திரமன்றி வெடிப்பின்போது தோன்றுகின்ற கட்டடத்தின் கற்துண்டுகளாலும் இழப்பு ஏற்படுகின்றது. சண்டையின் போது எறிகணை செலுத்துநனிற்குக் காப்பளிப்பதற்காக 1 - 2 வீரர்களை அவசியம் நியமிக்க வேண்டும். அவர்கள் எறிகணை செலுத்துநனிற்கு ஆபத்தைத் தரக்கூடிய எதிரிச் சூட்டாளர்களை அழிக்க வேண்டும். செலுத்துநனிற்கு இலக்கைச் சுட்டிக்காட்ட வேண்டும். எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு எறிகணை செலுத்துநன் சூட்டு நிலையை மாற்றுவதைக் (ஒவ்வொரு சூட்டின் பின்னும் மாற்றுவது விரும்பத்தக்கது) கண்காணிக்க வேண்டும். ஏனெனில் 2 - 3 சூடுகளின் பின் எறிகணை செலுத்துநன் சண்டைச் சத்தத்தையும் கட்டளைகளையும் கேட்க முடியாதவனாகிவிடுகின்றான். சூடு இலக்கைத் தாக்கிவிட்டதென்றால் அவன் பாதுகாப்பு நடைமுறைகளை மறந்து ஆரோக்கியமற்ற மனக்கிளர்ச்சி நிலைக்கு வந்துவிடுகின்றான். ஆகவே தான் அவனைக் காப்பளிக்கின்ற வீரர்கள் எப்பொழுதும் கண்காணித்துக்கொண்டிருக்க வேண்டும். சமர்ச் சூழ்நிலைகளில் எறிகணைச் செலுத்திக்குள் எறிகணை பொருத்தப்பட்ட நிலையில் கொண்டுசெல்லப்பட வேண்டும். மழைக்காலமாக அல்லது ஈரப்பதன் கூடிய காலநிலையாக இருந்தால் எறிகணை செலுத்தியின் சூழல் பகுதியையும் எறிகணையையும் பொலித்தீன் பையினால் மூடிவிட வேண்டும். ஏனெனில் உந்தல் தொகுதியிலுள்ள வெடிமருந்தின் தாள்க் காவலி இலகுவில் ஈரப்பதனை உறிஞ்சக்கூடியது. இதன் விளைவாக எந்தல் தொகுதி பயன்பாட்டிற்குப் பூரணமாக உகந்ததற்றதாக மாறுகின்றது. பை கழன்று விழாமலிருப்பதற்காக அதனைக் குழலோடு சிறுகயிற்றினால் கட்டிவிட வேண்டும். சூட்டிற்கு முன்னர் பை கழற்ற வேண்டிய தேவையில்லை. ஏனெனில் அது சூட்டிற்குத் தடையாக இருக்காது. மேலதிக எறிகணைகள் உந்தல் தொகுதி பொருத்தப்பட்ட நிலையில் கயிற்றினாலான வேகமாகக் கழற்றக்கூடிய காவுகயிற்றினுதவியுடன் தோளில் கொண்டுசெல்வதே மிகச்சிறந்த முறையாகும்.

தொடர்வான்....

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் வரலாற்றை அறிந்து கொள்வது அவசியம்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தனித்ததொரு கட்சியாக அல்லது கூட்டணிக் கட்சியாகப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை, மிக நீண்ட காலமாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் நடைபெறுவதற்கான எந்தவொரு சமிக்ஞையும் தென்படுவதாக இல்லை. மறுபுறத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரளவிலான அமைப்பிலிருந்து, கூட்டுக்கட்சிகளும் அக்கட்சிகளின் உறுப்பினர்களும் விலகி, தனிவழி சென்று கொண்டிருக்கின்ற போக்கை, நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. தமிழ் மக்களிடம், "நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் ஒன்றுபட்டால் தான் உண்டு வாழ்வு" என்று, விழுமிய வகுப்பெடுக்கும் இந்தக் கூட்டமைப்பின் தலைமைகள், கூட்டமைப்பைத் தனிக்கட்சியாகப் பதிவு செய்து, முறையான கட்டமைப்பை உருவாக்கி இயங்குவதில், தொடர்ந்தும் மெத்தனம் காட்டி வருவது என்பது, முரண் நகை. சுதந்திர இலங்கையில், ஒன்றுக்கொன்று வைரிகளாக இருந்த தமிழ்க் கட்சிகள், கூட்டணியாக ஒன்றிணைந்த சந்தர்ப்பங்கள் இரண்டு.

முதலாவது, 1972இல் அன்றைய சிறிமாவோவினதும் அவரது 'தோழர்'களினதும் ஆட்சியில், தமிழ் மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டது. அதன் போது, தமிழர்கள் கட்சி ரீதியாகப் பிளவடைவது, தமிழ் மக்களையும் அவர்களது அரசியலையும் பலவீனப்படுத்தும் என்றுணர்ந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர், கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் இருந்து பிரிந்து, இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்த சாமுவல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கினர். தமிழர் ஐக்கிய முன்னணி, 1976இன் வட்டுக்கோட்டை தனிநாட்டுத் தீர்மானத்தையொட்டி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஆனது. தமிழர்களிடம் பொதுவழக்கில், 'கூட்டணி' என்று அறியப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, தனித்த கட்சியாக இருந்ததுடன், அதற்கெனத் தனியான சின்னத்தையும் கொண்டிருந்தது. அது தான், 1977ஆம் ஆண்டுத் தேர்தல் முதல், 2004ஆம் ஆண்டுத் தேர்தல் வரை, தமிழ் மக்களின் செல்வாக்கைப் பெற்ற சின்னமாக இருந்தது. தமிழ் அரசியலில் உதயம் பெற்ற இந்த முதலாவது கூட்டானது, முறைப்படி, தனிக்கட்சியாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டாகவே அமைந்தது.

2001இல், **'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு'** என்ற கூட்டை ஸ்தாபிப்பதில், கிழக்கிலங்கை ஊடகவியலாளர்களின் முதன் முயற்சி முக்கியமானது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, விடுதலைப் புலிகள் அமைப்பால் உருவாக்கப்பட்டது என்பதில் எந்த உண்மையும் இல்லை. அது அடிப்படையில்லாத ஒரு மாயை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் கூட, அந்த மாயையை, தமக்கு வாக்குவங்கி ரீதியான செல்வாக்கை அதிகரிப்பதால், அதை மறுப்பது கூட இல்லை. ஆனால், உண்மையான அரசியல் வரலாறு என்னவென்றால், ஊடக மற்றும் சிவில் சமூகத்தின் முயற்சியாலேயே, 'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு' என்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டுச் சாத்தியமானது. இந்தக் கூட்டை, அடுத்த இரண்டு வருடங்களில், தமது அரசியல் முகவர்களாக, விடுதலைப் புலிகள் சுவீகரித்துக் கொண்டார்கள். 2001இல், தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (இது பெரும்பாலும் தமிழரசுக் கட்சியினரையும் குமார் பொன்னம்பலத்தோடு பிரிந்து சென்று, மீண்டும் தமிழ்க் காங்கிரஸை ஸ்தாபிக்காது கூட்டணியுடன் தொடர்ந்த எம். சிவசிதம்பரம், ஆனந்தசங்கரி உள்ளிட்ட முன்னாள் தமிழ்க் காங்கிரஸினரையும் கொண்டமைந்தது), தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பீ.ஆர்.எல்.எப் - சுரேஷ் பிரேமசந்திரனின் அணி) ஆகிய நான்கு கட்சிகள், பொது இணக்கப்பாடொன்றில் கையொப்பமிட்டதன் மூலம் பிறப்பெடுத்தது. தமிழர் ஐக்கிய முன்னணியைப் போன்று, 'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு' இன்னொரு தனியமைப்பாகப் பிறப்பெடுக்கவில்லை. மாறாக, இது இந்த நான்கு கட்சிகளிடையேயான பொது இணக்கப்பாட்டை வெளிப்படுத்தும் தளமாகவும் தேர்தல் கூட்டாகவுமே பிறப்பெடுத்தது.

'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு' என்ற பதாகையின் கீழ் இயங்கிய கட்சிகளிலும் ஒரு நிரந்தரத் தன்மையும் தொடர்ச்சியும் இருக்கவில்லை என்பதையும், நாம் காணக்கூடியதாக உள்ளது. விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சுவீகரித்துக் கொண்டதன் பின்னர், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்குள் இருந்த, விடுதலைப் புலிகள் அமைப்பு மீது நல்லபிப்பிராயம் இல்லாத தலைவர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் தொடர்ந்திருக்க விரும்பவில்லை. ஆகவே, கூட்டமைப்பில் முதல் பிரிவாக, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி கூட்டமைப்பிலிருந்து விலகியமை அமைந்திருந்தது. இந்தப் பிரிவோடு கூட்டமைப்பு, தனது தேர்தல் சின்னத்தையும் இழந்திருந்தது. ஏனெனில், உதய சூரியன் சின்னம், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் சின்னமாகும். இந்தப் பிரிவைத் தொடர்ந்து தான், அதுவரை காலமும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியினர், மீண்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உயிர்கொடுத்தார்கள். தமிழரசுக் கட்சியின் சின்னமான 'வீடு', தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தேர்தலில் போட்டியிடும் சின்னமாக, விடுதலைப் புலிகள் அமைப்பால் சிபாரிசு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது, விடுதலைப் புலிகள் அமைப்பின் முடிவாக இருந்திரா விட்டால், நிச்சயமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இதை ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய வாய்ப்பு இல்லவேயில்லை எனலாம்.

2009 வரை விடுதலைப் புலிகள் அமைப்பே, கூட்டமைப்பின் இணைக்கும் சக்தியாக இருந்தது. அவர்களுக்குப் பின்னர், கூட்டமைப்பு பிளவடையத் தொடங்கியது. இன்று கூட்டமைப்பு என்பது, இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். டெலோவும் புளொட்டும் வெறும் தேர்தல் பங்காளிகள் மட்டுமே. அரசியல் முடிவுகளில், நிலைப்பாடுகளில் டெலோவோ, புளொட்டோ எதுவிதப் பங்களிப்பும் செய்வதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சித் தலைமைகளின் முடிவுகளை, அங்கிகரிக்க வேண்டிய நிலையில் தான் அவர்கள் தொடர்கிறார்கள். உண்மையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, பதிவு செய்யப்பட வேண்டும் என்ற மிக நீண்ட காலமாகக் குரல்கொடுத்த ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் அதன் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் ஆகியோர், இப்போது கூட்டமைப்பில் இல்லை. கூட்டமைப்பிலுள்ள டெலோ, புளொட் ஆகியவை, தமக்குத் தேவையான தேர்தல் ஆசனங்கள் ஒதுக்கப்படும் வரை, தமிழரசுக் கட்சி எடுக்கும் முடிவுகளோடு, அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருப்பதாகத் தெரியவில்லை. எமக்கு, எமக்கான ஆசனங்களும் நாடாளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றம் போன்றவற்றுக்கான பதவிகள் இருந்தால் போதும் என்ற நிலையிலேயே, அவர்கள் இருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில், "தமிழரசுக் கட்சியும் நானே கூட்டமைப்பும் நானே" எனத் தமிழரசுக் கட்சித் தலைமைகள் மிகச் சுதந்திரமாக, கூட்டுக் கட்சிகளின் எந்த அழுத்தமுமின்றிச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், கூட்டமைப்பைப் பதிவதற்கு, அவர்களுக்கு எந்த அவசியமும் தேவையும் ஆர்வமும் இருக்காது என்பது யதார்த்தமானதே. ஆக, இவ்வாறானதொரு சூழ்நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, பதியப்பட வேண்டும் என்பதற்கான தேவை என்ன என்ற கேள்வி எழலாம். அதற்கான பதில், தமிழர் அரசியலின் எதிர்காலம் என்பதாக அமைய வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம் என்பதே, நாம் பொதுவாக எண்ணுவதை விட, மிகப்பெரியதொரு சாதனை. ஒன்றுக்கொன்று வைரிகளாக இருந்த கட்சிகளை, ஒரு மேடைக்குக் கொண்டு வருவது, அவ்வளவு எளிதானதொரு காரியமல்ல.

விடுதலைப் புலிகள் இருந்த வரை, கொள்கை ரீதியிலும் செயற்பாட்டு ரீதியிலும் தனிமனிதர்களால் கூட்டமைப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே, கூட்டமைப்புக்கு உள்ளான 'தடைகள் மற்றும் சமப்படுத்தல்களை' விடுதலைப் புலிகளே செய்து வந்தார்கள். விடுதலைப் புலிகளுக்குப் பிறகு, கூட்டமைப்பு என்பது, தமிழரசுக் கட்சியின் கைப்பொம்மையாகவும் அதன் பின்னர், அது ஒன்றிரண்டு தமிழரசுக் கட்சித் தலைமைகளின் கைப்பொம்மையுமாக மாறி விட்டது. இதன் காரணத்தால், கூட்டுக் கட்சியினருக்கு மாற்றுக் கருத்துகளைத் தெரிவிக்கவோ, தமிழரசுக் கட்சி தலைமைகளின், கூட்டமைப்பின் மீதான அதிகாரச் செல்வாக்கை மட்டுப்படுத்தவதற்கானதொரு கட்டமைப்பு முறையோ இல்லாததன் காரணத்தால், தேர்தல் வெற்றி, பதவி ஆசை என்பவற்றைத் தாண்டி, தமது கொள்கை மீதும் அக்கறைகொண்ட தரப்பினரால், கூட்டமைப்புக்குள் நீடிக்க முடியவில்லை.

உண்மையில், இன்று கூட்டமைப்பென்பது தமிழரசுக் கட்சியும் அவர்களது சின்னத்தில் போட்டியிட்டால் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற தரப்புகளும் தான். கூட்டமைப்பிலுள்ள டெலோ, புளொட் கொள்கை சார்ந்த முடிவுகளில் மட்டுமல்ல, இராஜதந்திரச் சந்திப்புகளில் கலந்து கொள்வதுகூட மிக அரிதே! தமிழரசுக் கட்சிக்காரருக்கு வேண்டுமானால், இது சாதகமான ஒன்றாக இருக்கலாம் ஆனால், 'தமிழரின் ஒற்றுமை' என்று, மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்லிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் தலைமைகள், உச்சரிக்கின்ற 'ஒற்றுமையை'ச் சிதைத்து, இன்று தமிழ் மக்களின் அரசியல் பலத்தைக் கூறுபோட்டுக் கொண்டிருக்கிறது. கூட்டமைப்பில் இருந்து பிரிந்து செல்பவர்களை விமர்சிப்பதற்கு அவசரப்படுபவர்கள், அவர்கள் ஏன் பிரிந்து செல்கிறார்கள் என்று சிந்திப்பதற்கு ஒரு நிமிடத்தையேனும் செலவளிப்பதில்லை.

உண்மையில், அவர்களுக்குப் பதவி ஆசை இருந்தால், அவர்கள் பிரிந்து சென்றிருக்கவே மாட்டார்கள். இன்றைய சூழலில், தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டிபோடுவது நிச்சயமான வெற்றியைத் தரும் என்பதைச் சிறுபிள்ளைகூட அறியும். அதையும் மீறி, அவர்கள் பிரிந்து செல்வதற்கு, என்ன காரணம் என்பதைச் சிந்திக்க வேண்டும். பல கட்சிகளினதும் அமைப்புகளினதும் கூட்டு என்பது, அனைத்துத் தரப்பையும் ஒன்றிணைக்கக் கூடியதொரு கட்டமைப்பைக் கொண்டதாக அமைய வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், அந்தக் கூட்டு நிலைக்காது. இன்று, கூட்டமைப்பு ஒரு முடிவை எடுக்கும் போது, அது வெறுமனே, தமிழரசுக் கட்சியின் முடிவாக மட்டுமோ, அவர்களால் திணிக்கப்படும் முடிவாக மட்டுமோ இருந்தால், ஏனைய கட்சிகளால் அத்தகைய கூட்டுக்குள், எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்க முடியும் என்பது கேள்விக்குறியே. ஆகவே தான், கூட்டமைப்பு ஒரு சுயாதீனமான கூட்டணியாகவும் அதற்கெனத் தனித்த 'தடைகள் மற்றும் சமப்படுத்தல்களை' உள்ளடக்கிய கட்டமைப்பையும் கொண்டமைய வேண்டும். அத்தகைய கட்டமைப்பு ஏற்படும் போது, அது தனிமனிதர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப அல்லது ஒரு கட்சியின் விருப்பத்துக்கு மட்டுமே ஏற்ப இயங்கும் அமைப்பாக அல்லாது, அர்த்தபூர்வமான கூட்டமைப்பாக அமையும். இல்லாவிட்டால், கூட்டமைப்பென்பது 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை'யாகவே அமைந்துவிடும்.

மறுபுறத்தில், கூட்டமைப்பைப் பதிவு செய்வதில் தமிழரசுக் கட்சிக்கு சட்டரீதியான நன்மையொன்றும் உள்ளது. இன்றைய சூழலில், தமிழரசுக் கட்சி அல்லாத ஏனைய கூட்டுக்கட்சி உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு, தேர்தலில் வெற்றிபெற்றுப் பின்னர் கட்சிதாவினாலோ, கட்சிக் கோட்பாடுகளுக்கு மாறாக நடந்தாலோ, தமிழரசுக் கட்சியால் அவர்களுக்கு எதிராக, எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அவர்களது மிக அடிப்படையான வாதமாக, "நாம், உங்கள் கட்சியின் உறுப்பினர் அல்ல ஆகவே, எங்கள் மீது நடவடிக்கை எடுக்க, உங்களுக்கு எதுவித அதிகாரமோ நியாயாதிக்கமோ கிடையாது" என்பதாக அமையும்.

அரசியல் கட்சியொன்றின் வேட்பாளர் பட்டியலூடாகத் தெரிவு செய்யப்பட்ட அல்லது பிரேரிக்கப்பட்ட நபரொருவர் குறித்த, அரசியல் கட்சியின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதே எமது சட்டமாகும். பஷீர் சேகுதாவூத் எதிர் பேரியல் அஷ்ரப் மற்றும் ஏனையோர் என்ற பஷீர் சேகுதாவூத் பதவி விலக்கல் வழக்கில் தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், 'பஷீர் சேகுதாவூத் தேசிய ஐக்கிய கூட்டணியின் உறுப்பினர் அல்ல அவர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினரே ஆவார். ஆகவே, தமது கட்சியின் உறுப்பினரல்லாத ஒருவரை, தேசிய ஐக்கிய கூட்டணியால், தமது கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்க முடியாது என்பதோடு, அதனால் அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்க முடியாது' என்று வழங்கியிருந்த தீர்ப்பு, இங்கு கவனிக்கத்தக்கது. இதனால் தான், தனிக்கூட்டணியாகப் பதிவு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தனது யாப்பில், கூட்டணிக் கட்சியின் அங்கத்தவர்கள், கூட்டணியின் அங்கத்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற ஏற்பாட்டைக் கொண்டிருக்கிறது.

ஆகவே, தமிழரசுக் கட்சி அல்லாத கூட்டமைப்பின் ஏனைய கட்சி உறுப்பினர்கள் கட்சிதாவினாலோ, கட்சிக் கட்டுக்கோப்புக்கு முரணாகச் செயற்பட்டாலோ, இன்றைய சூழலில் தமிழரசுக் கட்சி எனப்படும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பால், எதுவுமே செய்ய முடியாது என்பது தான், பட்டவர்த்தனமான உண்மையாகும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பை, தனித்த கூட்டமைப்பாகப் பதிவு செய்வதில் தமிழரசுக் கட்சியின் சுயநலத்தைத் தவிர வேறெதுவும் தடையாக இல்லை என்பதுதான், நடப்பவற்றை வைத்து, யூகிக்கக் கூடியதாக இருக்கின்ற விடயம் ஆகும்

**நெற்றிபொறியன்**



# ரணில் விக்கிரமசிங்கவின் காய் நகர்த்தல்

## அதிகாரப் பங்கீடின்றி முதலீடுகள் சாத்தியமில்லை என்பதை உலகத்துக்குப் பகீரங்கப்படுத்த வேண்டும்



-நிக்ஷன்-

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற வல்லரசு நாடுகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், வர்த்தகச் செயற்பாடுகள் போன்ற பல திட்டங்களை முன் அறிவித்தல்கள் இன்றி ரத்துச் செய்த சிங்கள ஆட்சியாளர்கள், புலம்பெயர் தமிழர்களுக்கு முதலீடு செய்ய அழைப்பு விடுத்திருக்கின்றனர். அரசுக்கு அரசு என்ற அணுகுமுறையில் சர்வதேச நியமங்களுக்கு ஏற்பச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களைச் சிறிய தீவான இலங்கை ரத்துச் செய்யும் சூழலில், எந்தவிதமான அரசியல் அதிகாரங்கள் - பாதுகாப்புகள் இல்லாத புலம்பெயர் தமிழர்கள் எந்த நம்பிக்கையோடு இலங்கையில் முதலிட முடியும் என்ற கேள்விகள் நியாயமானவை. தமிழ்த்தரப்பு தமது கோரிக்கையில் நிலையில்லாமலும் பிடிவாதம் இன்றியும், அதேநேரம் அவ்வப்போது சிங்கள ஆட்சியாளர்களுடன் கூட்டுச் சேர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கியும் செயற்பட்டமையினால், இந்தியா போன்ற நாடுகள் சிங்கள ஆட்சியாளர்களின் பக்கம் நின்று ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையாளுகின்றன. பொருளாதார நெருக்கடியில் இருந்து குறைந்த பட்சமேனும் மீள புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை எதிர்பார்க்கும் நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் மக்களின் முதலீடுகளை எதிர்பார்க்கிறார் என்பது தெரிகிறது. தமிழ் உறுப்பினர்களைப் பேச்சுக்கு வருமாறு அழைத்த பின்னணியும், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண வேண்டும் என்ற நோக்கில் அமைந்தமை என்பதும் கண்கூடு.

ஆகவே இரண்டு விடயங்களை இங்கே அவதானிக்க வேண்டும். ஒன்று, புலம்பெயர் மக்களின் உதவிகளைப் பெறுவது. இரண்டாவது அரசியல் தீர்வுக்கான பேச்சு என்று கூறி, இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் விரிவடைகின்றன என்ற தோற்றப்பாட்டை சர்வதேசத்திற்குக் காண்பிப்பது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்து பெற்ற பட்டறிவு தமிழர்களிடம் உண்டு. அதுவும் புலம்பெயர் தமிழர்களிடம் அந்தப் பட்டறிவு அதிகமாகவே உண்டு என்பதைச் சிங்கள ஆட்சியாளர்கள் நம்ப மறுக்கின்றனர் அல்லது அவர்கள் சார்பான தமிழ் முகவர்கள் உர மூட்டுகின்றனர் எனலாம். 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்திலே தான் சில சர்வதேச ஒப்பந்தங்கள் செயலிழந்தன. குறிப்பாக 2016 ஆம் ஆண்டு செய்யப்பட்ட கொழும்புத் துறைமுக கிழக்கு முனை அபிவிருத்தி ஒப்பந்தம், ஜப்பான் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் இலங்கையுடன் இணைந்து அபிவிருத்தியை மேற்கொள்வதென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அதற்கு அனுமதிக்கவில்லை. மாறாகக் கொழும்புத் துறைமுகக் கிழக்கு முனை அபிவிருத்தி சீனாவிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதேபோன்று 2018 இல் அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் அபிவிருத்தி உடன்படிக்கை தன்னிச்சையாகவே ரத்துச் செய்யப்பட்டது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன மிலேனியம் சவால்கள் நிறுவன தலைவருடன் உரையாடி இணக்கம் தெரிவித்த நிலையிலேயே ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. அதேபோன்று இலங்கையின் தலைநகர் கொழும்பில் வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஜப்பான் அரசின் கடனுதவித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இலகு ரயில் சேவைத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக ரத்துச் செய்துள்ளது. திட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பாக ஜப்பான் அரசுடன் எந்தவிதமான பேச்சுக்களும் நடத்தப்படவில்லை. இலங்கைக் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் அறிக்கையின் படி செப்டம்பர் 24, 2020 அன்று அங்கீகாரம் பெற்றிருந்த நிலையில் இத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அதே வேளை, பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இந்தியாவும் இலங்கையும் 2006 இல் சம்பூர் மின் உற்பத்தி மற்றும் 2009 இற்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தன. ஆனால் இவை உரிய முறையில் செயற்படவில்லை. 2002 இல் கொழும்பில் அமைக்கப்பட்ட இந்தியாவின் அப்பலோ மருத்துவனை, 2006 இல் இலங்கையினால் பறிமுதல் செய்யப்பட்டது. சர்வதேச விதிகளுக்கு மாறாக இலங்கை வர்த்தகர்ஒருவர் மூலம்வெவ்வேறுபெயர்களில் அதிகளவு பங்குகளைக் கொள்வனவு செய்து அப்பலோ மருத்துவமனையை இலங்கைக்கு உரியதாக்கி லங்கா மருத்துவமனை என்று பெயர் மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக அப்போது கொழும்பில் இருந்த இந்தியத் தூதுவர் நிருபன் சென், அமைச்சராக இருந்த அமரர் அனுரா பண்டாரநாயக்கவுடன் கடுமையாகத் தர்க்கப்பட்டார். இலங்கை நாடாளுமன்றத்திலும் இந்தியாவுக்கு எதிரான விமர்சனங்களை அனுரா பண்டாரநாயக்க அள்ளி வீசினார். வல்லாதிக்க நாடுகளின் பிரபல சர்வதேச வர்த்தக நிறுவனங்கள் இலங்கையோடு நம்பிக்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களைத் தன்னிச்சனையாக ரத்துச் செய்த சிங்கள ஆட்சியாளர்கள், அதிகாரமே இல்லாத எந்த ஒரு நாடுகளினதும் ஆதரவு இல்லாத சூழலில், புலம்பெயர்ந்த தமிழ் வர்த்தகர்கள் முதலீடு செய்தால், அதனை மீண்டும் தட்டிப்பறிக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

வல்லாதிக்க நாடுகளின் பிரபல சர்வதேச வர்த்தக நிறுவனங்கள் இலங்கையோடு நம்பிக்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களைத் தன்னிச்சனையாக ரத்துச் செய்த சிங்கள ஆட்சியாளர்கள், அதிகாரமே இல்லாத எந்த ஒரு நாடுகளினதும் ஆதரவு இல்லாத சூழலில், புலம்பெயர்ந்த தமிழ் வர்த்தகர்கள் முதலீடு செய்தால், அதனை மீண்டும் தட்டிப்பறிக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

சென்னை இராமச்சந்திர மருத்துவமனையைக் கொழும்பில் அமைக்க சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது 2004 இல் வர்த்தக ஒப்பந்தம் ஒன்று தயாராகியிருந்தது. ஆனால் 2005 இல் மகிந்த ராஜபக்ச ஜனாதியாகப் பதவியேற்ற பின்னர் அதனை ரத்துச் செய்தார். கொழும்பு கொள்பிட்டி காலி வீதியில் இந்திய தூதரகம் அமைப்பதற்கு 2013 இல் இடம் ஒதுக்கிவிட்டுப் பின் அதனை மீளப் பெற்றுச் சீன விமான நிறுவனம் ஒன்றுக்குக் கையளிக்கும் ஒப்பந்தத்தில் மகிந்த கைச்சாத்திட்டார். இவ்வாறு பல ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டும் வேறு சில வெளிநாட்டு வர்த்தக முதலீடுகள் அபகரிக்கப்பட்டும் உள்ள சூழலில், புலம்பெயர் தமிழர்கள் எதனை நம்பி இலங்கையில் முதலீடு செய்ய முடியும்? இலங்கை அரச நிறுவனங்களை அல்லது அரச - தனியார் கூட்டு நிறுவனங்கள் சிலவற்றைப் பொறுப்பேற்றுச் செயற்படுத்த முடியுமா என்ற கேள்விகளும் நியாயமானவை. உதாரணமாக ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறியே அதன் பங்குகள் எமிரேட்ஸ் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருந்தன. ஆனால் லாபம் ஈட்ட ஆரம்பித்ததும், பின்னர் அந்த நிறுவனத்தை இலங்கை அரசாங்கம் மீளவும் பெற்றுக் கொண்டது. ஆகவே வல்லாதிக்க நாடுகளின் பிரபல சர்வதேச வர்த்தக நிறுவனங்கள் இலங்கையோடு நம்பிக்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களைத் தன்னிச்சனையாக ரத்துச் செய்த சிங்கள ஆட்சியாளர்கள், அதிகாரமே இல்லாத எந்த ஒரு நாடுகளினதும் ஆதரவு இல்லாத சூழலில், புலம்பெயர்ந்த தமிழ் வர்த்தகர்கள் முதலீடு செய்தால், அல்லது சில அரச - தனியார் கூட்டு நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்து இயக்கினால் அதனை மீண்டும் தட்டிப்பறிக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? வல்லரசு நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டமை குறித்து இன்று வரை எந்த ஒரு சிங்கள ஆட்சியாளர்களும் பொறுப்புக்கூறவும் இல்லை. ஆகவே புலம்பெயர் அமைப்புகள் இந்த அநீதிகளைச் சுட்டிக்காட்டியும், எழுபது வருடங்களாகத் தமிழர்கள் ஏமாற்றபட்டமை குறித்தும் பரப்புரை செய்ய வேண்டும். அத்துடன் வடக்குக் கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசம் என்ற அங்கீகாரத்துடன் சுயாட்சி அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்படாமல், இலங்கையில் எந்த ஒரு முதலீட்டுக்கும் தயார் இல்லை என்ற உறுதியான தகவலை சர்வதேசத்தில் பிரச்சாரப்படுத்தவும் வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவோ, சஜித் பிரேமதாசாவோ, சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மாற்ற விரும்பமாட்டார்கள் என்பது எழுபது வருட உண்மை. முதலீடுகளைச் செய்யுமாறு ரணில் அழைப்பு விடுத்துள்ள நிலையில், உள்ளகப் பொறிமுறை தான் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன கொழும்பில் ஏழாம் திகதி புதன்கிழமை செய்தியாளர்களிடம் துணிவுடன் கூறியிருக்கிறார். சிங்களவர்கள் விரும்பும் அரசியல் தீர்வின் மூலம் புலம்பெயர் மக்கள் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டுமெனவும் சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்புகின்றனர், எதிர்பார்க்கின்றனர் என்பதும் இங்கே பகிரங்கமாகியுள்ளது.

ஆகவே இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பில் மாற்றத்தைச் செய்யாமல், உள்ளக ரீதியான ஒற்றையாட்சிப் பொறிமுறைகள் ஊடே கொழும்பை மையமாகக் கொண்ட அதிகாரப் பரவலாக்கத்தை மாத்திரம் இலங்கை விரும்புகிறது. அத்துடன் சிங்களவர்கள் விரும்பும் அரசியல் தீர்வின் மூலம் புலம்பெயர் மக்கள் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டுமெனவும் சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்புகின்றனர், எதிர்பார்க்கின்றனர் என்பதும் இங்கே பகிரங்கமாகியுள்ளது. ஆகவே தமிழர்களுக்குரிய அரசியல் - பொருளாதார பாதுகாப்பு அற்ற ஒரு சூழலில் துணிவோடு அழைப்பு விடுக்கப்படுகின்றது என்றால், இதன் பின்னால் வல்லாதிக்க நாடுகளின் பங்களிப்பும் இல்லாமல் இல்லை. ஏனெனில் தம்முடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் பலவற்றை மீறியதால், அதற்குப் பதிலாக இலங்கையோடு பேரம் பேசி இலங்கையில் தமக்குரிய வேறு ஏதேனும் லாபங்களை அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற வல்லாதிக்க நாடுகள், அரசுக்கு அரசு என்ற இராஜதந்திர உறவுகளின் மூலம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அரசற்ற சமூகமாகக இருக்கும் புலம்பெயர் தமிழர்களைச் சிங்கள ஆட்சியாளர்கள் கன கச்சிதமாக ஏமாற்றுவர்கள் என்ற நுட்பமான அடிப்படை உண்மை இந்த வல்லாதிக்க நாடுகளுக்குத் தெரியாததல்ல.



11ஆம் பக்கம் பார்க்க...

# தமிழர் தரப்பின் தமிழ் தேசியம் எங்கே செல்கின்றது? என்னவாகப் போகின்றது? – சிவலிங்கம்

**கேள்வி : தமிழ் தேசியம் பற்றி உங்களது கருத்து என்ன?**

தமிழ்களின் வல்லரசான கட்சிகளாக பல கட்சிகள் இருக்கின்றன. குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு இருக்கின்றது அதற்குள்ளும் மூன்று கட்சிகள் இருக்கின்றன. அதைவிட விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சி டக்ளஸ் தேவானந்த போன்றவர்களின் கட்சி எல்லாம் முன்னணியில் இருக்கின்ற கட்சிகளா இருப்பவையாகும் தமிழ் தேசியம் என்ற ரீதியில். இந்த மூன்று கட்சிகளிலும் மூன்று விதமாக வேறுபாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒன்று உண்மையாக தமிழ் மக்களின் நலன்சார் கட்சிகளாக ஒருசாராரும் அரச நலன் சார்ந்த தமிழ் கட்சிகளாகவும் சில கட்சிகள் அரசிற்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்துக்கொண்டு வெளிப்படையாக சிங்கள அரசு சார்ந்தும் உள்வாங்கும் காட்சிகளாகவும் தமிழ் கட்சிகளில் இருப்பதனை காணக்கூடிஙதாக இருக்கின்றது. அவற்றின் செயற்பாட்டின் ஊடாக நோக்கும் பொழுது ஓரளவுக்கு நாங்கள் திருத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது தமிழ் அரசியல் கட்சிகளை. இந்த வகையில் பார்க்கின்ற பொழுது இன்றைய நிலைகளில் தமிழ் மக்களின் தீர்வு என்னும் பொழுது மிகவும் சிக்கலானது ஒன்று போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் ரீதியான போராட்டமாகத்தான் எங்களது தமிழ் மக்களது உரிமைகளை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. தமிழ் மக்களின் உரிமையை பெறுகின்றது அரசியல் ரீதியாக மட்டுமே தங்கியிருக்கின்றது. எனவே இந்த நிலையிலே எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் பொழுது தங்களது சுயநலன்களை நாங்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். ஆனால் எங்களிடையே இருக்கின்ற பிளவுகள் தான் எங்களது தீர்வுகளுக்கு எதிரிகளாக அல்லது தீர்வுகளை பெறுவதற்கு இயலாமல் இருக்கின்றதன் காரணம் எங்களது கட்சிகளுக்கிடையே இருக்கின்ற வேறுபாடுகளும் அவர்களுக்கிடையே இருக்கின்ற காற்புடைமைகள் போன்றவைகள் தான் மிக முக்கியமாக எங்களால் தீர்வு நோக்கி நகர முடியாமல் இருப்பதற்கு கட்சிகளின் வேறுபாடுகள் தான் மிகமுக்கியமாக இருக்கின்றது.

**கேள்வி : அப்படியெனில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தேசியம் சார்ந்த நடவடிக்கைகளிலே ஈடுபடுகின்றது ஏனைய கட்சி அவ்வாறு ஈடுபடவில்லை என்று கூறுகின்றீர்களா?**

பதில் : அப்படியும் சொல்லமுடியாது டக்ளஸ் தேவானந்தாவை பொறுத்தவரையில் ஓரளவிற்கு அவரது நிலைப்பாடு அரசாங்கத்துடன் இருந்தாலும் அவருடைய அரசாங்கத்திற்கு நாங்கள் பெரியளவில் எதிராக கருத்து தெரிவிக்கப்படமுடியாமல் இருந்தாலும் அவர் ஓரளவிற்கு தமிழ் தேசியத்தை விடுவிப்பதற்காக மற்றைய தேசியத்தை அறிவித்தது ஓரளவிற்கு வரவேற்கக்கூடியதாக தான் இருக்கின்றது. 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் பேச்சு வார்த்தைகள் எல்லாம் குழம்பி அவர்களுடன் பேசி பயனில்லை என்று சொல்லும் பொழுது அது யதார்த்தமில்லாத ஒன்றாகத்தான் இருந்தது. ஏனென்றால் எப்பொழுதும் நாங்கள் பேசத்தான் இருக்கின்றோம். பேசாமல் இருந்து எதை சாதிக்கப்போகின்றோம் என்று தான். ஏனென்றால் உலக அரசியலை பொறுத்தவரை தமிழ் இனம் ஒடுக்கப்படுகின்றது இலங்கையில் தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகின்றார்கள் என்பதை பெரியளவிலும் அதற்கு அவர்கள் குரல் கொடுப்பார்கள் என்றும் இந்த நிலையில் பேச்சுவார்த்தை ஒன்று தான் தற்பொழுதுள்ள தெரிவாக இருக்கின்றது. அந்த பேச்சுவார்த்தை எவ்வாறு நடைபெறுகின்றது அந்த பேச்சுவாத்தைக்கு நாங்கள் எவ்வாறு



நடைபெறுகின்றது அதில் நாங்கள் எவ்வாறு முகம்கொடுக்கப்போகின்றோம் என்பது தான் தற்பொழுதுள்ள தெரிவாக இருக்கின்றது.

**கேள்வி : தமிழ் தேசிய மக்கள் முன்னணியை பொறுத்தவரையிலே ஏனைய கட்சிகள் கூட்டு சேர்ந்து அரசாங்கத்தை ஆதரிப்பது அல்லது அவர்களுடன் பேச்சவார்த்தைகளை நடத்துவது என்பது அவர்கள் 13 ஐ ஆதரிக்காதவர்களாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருக்கின்ற ஏனைய கட்சிகளையும் குற்றம் கூறுகின்றவர்களாகவே தொடர்ந்தும் இருக்கின்றார்கள்.இதனால்தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்ற பேச்சுக்களை பேசிக்கொண்டிருக்கின்ற இந்த கட்சிகளிடையே ஒற்றுமையை உருவாக்கமுடியாத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. அதற்கான ஒரு அடுத்த கட்ட நடவடிக்கை தான் என்ன?**

பதில் : தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் உள்ள கட்சிகளிற்குள் பெரியளவிலான கொள்கை ரீதியான வேறுபாடுகள் நடைமுறை ரீதியான வேறுபாடுகள் இருக்கின்றன அதன் தன்மையிலே தமிழரசுக் கட்சி தனித்து போக்கிடுமா? இல்லையா? அவர்களுடன் நாங்கள் சேர்ந்து அதற்கு முடிவெடுக்க வேண்டும் என்ற தமிழர்களுடைய நலன்கள் என்ற விடயத்திலே அவர்களுடைய கட்சிகளுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவரது பேச்சில் பொறாமை இருந்தது என்பது கொஞ்சம் ஏற்றுக்கொள்ளமுடியாமல் தான் இருக்கின்றது.

ஏனென்றால் பேச்சு வார்த்தையில் ஒன்றும் தரமாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும் அவர்களுக்கும் தெரியும் நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று. தமிழ் தரப்பிற்கும் தெரியும் அவர்கள் ஒன்றும் தரப்போவதில்லை என்று அதனை நாங்கள் எவ்வாறு கையாளப்போகின்றோம் என்பதில் தான் எங்களது பேச்சு தங்கியிருக்கும். அது ஏதோவொரு வகையில் எல்லோரும் ஒற்றுமையாக போய் ஒற்றுமை தான் பலன் என்பது எங்களது தமிழில் உள்ள முக்கிமான ஒரு வார்த்தை. அந்த ஒற்றுமை என்பது அனைத்து வேறுபாடுகளையும் மறந்து நாங்கள் ஏதோவொரு பொயின்டில் இருந்து போக வேண்டும். 13 ஆம் திருத்தத்தில் தீர்வு இல்லை என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். 13 ஆம் திருத்தத்தில் உள்ளவற்றை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்கின்றோமே தவிர தமிழ் மக்களுக்கு தீர்வாக வேண்டும் என்று கேட்கவில்லை. ஆகவே அதை புரிந்துகொண்டு நாங்கள் எல்லோரும் ஒரு புள்ளியில் இருந்துகொண்டு தான் ஆரம்பிக்க வேண்டும். டொப்பில் போயிருந்துகொண்டு இதைதா என்று கேட்பது அல்லது நாங்கள் பெரும்பான்மையாக கேட்பது என்பது தற்போதைய காலத்திலே சாத்தியமில்லை. தற்பொழுது எங்களது நிலையிலே நாங்கள் பேச்சுவார்த்தைக்கு போய் பேச்சுவார்த்தைகளை தரமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டும் அந்த பேச்சுவார்த்தையிலே எவ்வாறு நாங்கள் நடந்து கொள்ளுகின்றோம் எவற்றை கேட்கின்றோம் என்பதில் தான் எங்களது எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

**கேள்வி : தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகள் ஏன் அந்த ஒற்றுமையை பேணமுடியாத சூழ்நிலை இருக்கின்றது என்றவொரு கேள்வி எழுப்பப்படுகின்றதல்லவா?**

பதில் : அது முற்றுமுழுதாக தனிப்பட்ட ரீதியில் கட்சியிலுள்ள மக்களின் அபிப்பிராயமல்ல இது தனிப்பட்ட தலைவர்களினது அபிப்பிராயம் என்று தான் என்னால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

**கேள்வி : அவ்வாறாயின் அரச ஏஜன்டுகளாக அவர்கள் மறைமுகமாக திரை மறைவிலிருந்து செயற்படுகின்றார்கள் என்று கூறவருகின்றீர்களா?**

பதில் : நடைமுறையில் பார்க்கின்ற பொழுது அண்மையிலே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அறிவித்திருந்தார் செய்கின்ற விடயங்களை தான் அவர் அந்த அறிக்கையிலே அறிவித்திருக்கின்றார் தமிழ் கட்சிகளுக்குள்ளேயே தீர்வு என்பது வந்து விடக்கூடாது என்பதனை அவர்கள் விரும்பவில்லை என்றில்லை. ஆனால் அவர் தங்கள் நலன் சார்ந்து அல்லது யாரால் வந்தது. அது எங்களால் தான் வந்தது அல்லது தமிழரசுக் கூட்டமைப்பால் வந்துவிடுமோ என்றவொரு ஐயப்பாடு அதனால் தாங்கள் பின் தள்ளப்பட்டு விடுவோமோ தமிழ் மக்களுக்கிடையில் என்றவொரு சுயநல போக்குத்தான் முக்கியமாக அதில் தெரிகின்றது. ஏனென்றால் அவர்களும் நீண்டகாலம் அரசியல் செய்யப்போவதில்லை. ஆனால் தமிழ் மக்களுக்காக அவர்கள் தங்களை முற்றுமுழுதாக அர்ப்பணித்து சரி நாங்கள் இந்த கட்டத்திலே அரசியலை விட்டு வெளியேறுகின்றோம் உங்களால் ஏலும் என்றால் செய்யுங்கள் என்ற மாதிரியான கருத்துக்களை அவர்கள் சொல்லுவார்களாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அது அவர்களை எதிர்கால சந்ததியினர் எதிர்பார்க்கும் அளவிற்கு அவர்கள் நடந்துகொண்டால் தமிழ் மக்களுக்கும் நல்லம் அவர்களுக்கும் நல்லம்.

**கேள்வி : ஏனைய தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் அனைத்தும் ரணில் விக்ரமசிங்கவினுடைய பேச்சுக்களில் ஒரு நிபந்தனையை வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பும் காணி விடுவிப்பு சம்மந்தமான பிரச்சனைகள் தொடர்பாகவும் எங்களது 13 ஆம் திருத்தம் தொடர்பான பிரச்சனைகள் என பலரும் மூன்று நான்கு பிரச்சனைகளை முன்வைத்த விடயம் தான் தற்பொழுது ரணில் விக்ரமசிங்கவினுடைய சந்திப்பில் இடம்பெற்ற விடயமாக இருக்கின்றது. அதே நேரத்தில் இவற்றை எல்லாம் எதிர்க்கின்றோம் என வெளிப்படையாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சி சார்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி வரவில்லை என்றால் இவர்கள் அரசாங்க கைக்கூலிகளாக செயற்பட்டு இதனை குழப்புகின்றார்கள் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?**

பதில் : நாங்கள் நேரடியாக இதனை சொல்லமுடியாது. நடைமுறைகளை பார்த்து தான் கூறமுடியும் அவர்கள் என்ன சிந்திக்கின்றார்கள் என்பது தான் முக்கியமான விடயம்.

**கேள்வி : அவர்கள் கூறும் கருத்து உடன்பாடு என்னவென்றால் அதாவது தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பவற்றிலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஏனைய கட்சிகளும் வழிவிலகிச் செல்கின்றது நாங்கள் மட்டும் தான் தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒரே கோட்பாட்டில் நாங்கள் பயணிக்கின்றோம் என்ற கருத்தைத் தானே அவர்கள் மக்கள் மத்தியிலே முன் வைக்கின்றார்கள். அவ்வாறெனில் யார் போகும் பாதை பிழையாக இருக்கின்றது?**

பதில் : இதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும் ஏனென்றால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் பேச வேண்டும் பேசாமல் இருப்பது இந்த தருணத்தில் அவ்வளவு பொருத்தமில்லை. என்னிடம் தற்போதுள்ள ஒரேயொரு ஆயும் பேச்சு தான். தீர்வு தரமுடியாது என்று ஒருகட்டத்தில் அவர்கள் கூறுவார்களாக இருந்தால் நாங்கள் வேறு வழியை பார்த்து சர்வதேசத்திடம் போவதற்கு எங்களுக்கு விருப்பமில்லை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான உறுதியையும் கொடுக்க தயாரில்லை என்பதனை நாங்கள் முழுமையாக அறிந்த விடயம். எனவே பேச்சு வார்த்தைக்கு போனால் தான் தெரியும் அரசாங்கம் என்ன என்ன விடயங்களுக்கு தீர்வு தருவதற்கு தயாரில்லை. 13 ஆம் திருத்தத்திற்கு அவர்கள் எதனை தரவிருக்கின்றார்களோ அதனை எதிர்ப்பதற்கு சிங்கள கட்சிகள் பல இருக்கின்றன. எனவே தமிழ் மக்களது அபிலாசைகளை தீர்த்து வைப்பதற்கு அவர்கள் தயாரில்லை.

பேச்சுக்குப் போனால் தான் காட்ட முடியும் பேச்சுக்குப் போகாமல் காட்டமுடியாது. எங்களிடம் என்ன பேச்சுவார்த்தைகள் வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் உதறிவிட்டு போவது தான் இந்த நேரத்திலுள்ள ஒரு இறுதி முடிவு. ஒரு இடத்தில் இருந்து பேசி கதைத்து இதைத்தான் நாங்கள் செய்வோம் இதுவொரு ஆரம்ப புள்ளி என கதைத்து கண்டுபிடிக்க வேண்டும். அதில் அவர்கள் குழம்பி போனார்கள்.

**கேள்வி : அப்படியிருந்தால் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்து பாடுபடுகின்றோம் என்று சொல்லும் கட்சிகள் யுத்தம் நிறைவடைந்து தற்பொழுது பேச்சுக்களின் மூலமே தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் என்ற காலகட்டத்தில் எத்தகையதொரு ஒருமைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும் என்பது உங்களது இறுதியான கருத்து என்ன?**

பதில் : முக்கியமாக விட்டுக்கொடுப்பு. அதாவது நான் தான் பெரிசு நீதான் பெரிசு என்றில்லாமல் பேச்சு வார்த்தையில் அல்ல முதலில் நாங்கள் எதனையும் எங்களுக்குள் விட்டுக்கொடுக்க வேண்டும்.

11ஆம் பக்கம் பார்க்க...

**நேர்காணல் : இரணியன்**

## “இறந்த காலத் தெளிவும், நிகழ்கால நிதானமும் இருந்தால் எதிர்காலத் தீர்க்க தரிசனம் இயல்பாகவே உதயமாகும்”

### என்ற கூற்றுக்கு ஒப்ப அன்ரன் பாலசிங்கத்தின் தீர்க்க தரிசனம், அவரின் முடிவு சரியானது என்பதை நிரூபித்து நிற்கிறது.

## மரணத்தின் பின்பும் வாழும் தேசத்தின் குரல்

# அன்ரன் பாலசிங்கம்



அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மார்ச் 4, 1938 மட்டக்களப்பு, இல் பிறந்தார்.. இவர் இங்கிலாந்து குடியுரிமைமைக் கொண்ட ஈழத்து தமிழராவார். ஆரம்பக்காலத்தில் இலங்கையின் வீரகேசரியின் பத்திரிகையாளராக பணியாற்றிய பாலசிங்கம் பின்னர் கொழும்பின் பிரித்தானிய தூதரகத்தில் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றினார். இங்கு பிரித்தானிய தூதரகத்தில் 10 ஆண்டுகள் கடமையாற்றியதனால் இங்கிலாந்து குடியுரிமை பெற்றார். 1970களில் பாலசிங்கம் இங்கிலாந்தில் இருந்து எழுதிய கெரில்லாப் போர் முறை குறித்த நூலை வாசித்த தலைவர் பாலசிங்கத்துடன் தொடர்புக் கொண்டதன் மூலம் பாலசிங்கத்துக்கு புலிகள் அமைப்புடன் தொடர்புகள் ஏற்பட்டது. பின்னர் பாலசிங்கம் இந்தியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த தமிழ்ப் போராளிகளுக்கு அரசியல் வகுப்புகளை நடத்தும் போது தலைவருடனான தொடர்பு மேலும் வளர்ந்தது. 1983, கறுப்பு யூலைக்குப் பிறகு இங்கிலாந்தில் இருந்து வெளியேறிய பாலசிங்கம் தம்பதியினர் இந்தியாவுக்கு குடிப் பெயர்ந்தனர். அவுஸ்திரேலியரான அடேல் ஆன்னை ( அடேல் பாலசிங்கம் ) காதல் திருமணம் செய்துக்கொண்டார். 1985, திம்பு பேச்சுவார்த்தையில் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு ஆலோசகராக செயலாற்றிய பாலசிங்கத்தின் நிலை காலப்போக்கில் புலிகள் இயக்கத்தில் பாலசிங்கத்தின் நிலை உயர்ந்து புலிகளின் தலைமை பேச்சுவார்த்தையாளராகவும் அரசியல் ஆலோசகராகவும் உயர்ந்த அதேவேளை தலைவரின் நெருங்கிய நண்பராகவும் மாறினார்.

ஏப்ரல் 2002 இல் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் முன்னர் கிளிநொச்சி பத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்து கொண்டு மொழி பெயர்ப்பு உதவிகளையும் செய்தார். தொடர்ச்சியாக வைத்திய பராமரிப்பில் இருந்து வந்த கலாநிதி அன்டன் பாலசிங்கம் டிசம்பர் 14, 2006 அன்று தனது 68வது வயதில் லண்டனில் காலமானார். மறைந்த அன்ரன் பாலசிங்கத்துக்கு “தேசத்தின் குரல்” எனும் கௌரவத்தை தலைவர் அறிவித்தார்.

இவரது நூல்கள் . போரும் சமாதானமும், விடுதலை ஆகியனவாகும். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பம் முதல் இன்று வரை ஒரே இலக்கை மையமாகக் கொண்டே நகர்ந்து செல்கின்ற போதிலும் அதன் செல்நெறியைத் தீர்மானிப்பதில் பலரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள். உலகில் இதுவரை நடைபெற்ற அனைத்துப் போராட்டங்களையும் போன்று போராட்ட வரலாறானது போராட்ட அமைப்பின் தலைமையைச் சார்ந்தே இருந்து வந்துள்ளது. எமது விடுதலைப் போராட்டமும் அதற்கு விதி விலக்கல்ல. எனினும், எமது விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆய்வு செய்யப் முனைவோர், போராட்டத்தின் மிகக் குறிப்பாகச் சொல்வதானால் போராட்ட வழிமுறையின் செல்நெறியைத் தீர்மானிப்பதில் தேசியத் தலைவருக்கு அடுத்ததாக அதிகம் செல்வாக்குச் செலுத்திய ஒரு தனிநபரைக் கண்டறிவராகில் அது "தேசத்தின் குரல்" அன்ரன் பாலசிங்கத்தைத் தவிர வேறு யாருமாக இருக்க முடியாது.

ஆயுதப் போராட்டங்கள் பெரும்பாலும் உருவாக்கப் படுவதில்லை. உண்மையான நேர்மையான விடுதலைப் போராட்டங்கள் சூழ்நிலையின் குழந்தையாகவே பிரசவிக்கின்றன. இத்தகைய வேளையில் பெரும்பாலும் உணர்ச்சியால் மிக அரிதாக உணர்வால் உந்தப்பட்ட தனிநபர்கள் போராட்டத்தின் முன்னணிப் பாத்திரத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இது தவிர்க்க முடியாத ஒரு நியதியாக உள்ளது. இத்தகைய போராட்டங்களை புத்திஜீவிகள் மிகவும் கவனத்துடன், தள்ளியிருந்து அவதானிப்பார்கள். அவர்களைப் பொறுத்த வரை இத்தகைய விடயங்கள் வாலிபப் பருவத்துச் சாகச விளையாட்டுக்களாவே தெரியும். எனவே ஆரம்பத்தில் இத்தகைய நடவடிக்கைகளை விமர்சிக்க முனைவர். முடிந்தால் முளையிலேயே கிள்ளிவிடத் துணிவர். ஆனால், இது முடியாமற் போகும் போதும். சமூகத்திலே ஏற்பட்டு வரும் மாற்றங்களை அவர்கள் உணரத் தொடங்கும் போதும். அவர்களுடைய முன்னைய அபிப்பிராயம் மாறும். இந்நிலையில் அவர்கள் தாமாகவே போராட்டங்களில் இணைந்து கொள்வர். அதற்கு வலுச் சேர்ப்பர். அத்தகையோரின் தேவையை உணர்ந்து அவர்களை நாடிச் சென்ற நிலைமை மாறி, அவர்களாகவே போராளிக் குழுக்களை நாடிச் செல்வர். அன்ரன் பாலசிங்கம் விடயத்திலேயும் இதுவே நடந்தது. லண்டனில் வாழ்ந்து கொண்டிருந்த அவர் சென்னைக்கு வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். நட்பை ஏற்படுத்திக் கொண்டார் இந்த நட்பு எத்தகைய ஆழமானது என்பதைத் தொடர்ந்து வந்த காலங்களில் பல தடவைகளில் நாம் காணக் கூடியதாக இருந்தது. அன்ரன் பாலசிங்கம் போராட்ட அரசியலில் பிரவேசித்த கால கட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட அரங்கில் பல போராட்ட இயக்கங்கள் இருந்தன. ஓடிக் கொண்டிருக்கிற குதிரைகளில் தொடர்ந்து ஓடக்கூடிய குதிரை அல்லது தொடர்ந்தும் ஓடப் போகின்ற குதிரை எது என்பதைத் தீர்மானிப்பதற்கு அவருடைய மதிநுட்பம் உதவியது. ‘இறந்த காலத் தெளிவும், நிகழ்கால நிதானமும் இருந்தால் எதிர்காலத் தீர்க்க தரிசனம் இயல்பாகவே உதயமாகும்” என்ற கூற்றுக்கு ஒப்ப அன்ரன் பாலசிங்கத்தின் தீர்க்க தரிசனம், அவரின் முடிவு சரியானது என்பதை நிரூபித்து நிற்கிறது. அதேவேளை, தலைவர் பிரபாகரன் கூட ‘தான் தேடிக் கொண்டிருந்த நபர்” கிடைத்து விட்டார் என மகிழ்ந்தார். சரியாகச் சொல்வதானால் விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றை அன்ரன் பாலசிங்கத்துக்கு முந்திய காலம், அன்ரன் பாலசிங்கத்துக்குப் பிந்திய காலம் என இரண்டாக வகைப்படுத்தலாம். விடுதலைப் புலிகள் பத்தோடு பதினொன்றாக இருந்த காலங்களில், சித்தாந்த அடிப்படையில் செயற்பட்ட இயக்கங்கள் எனத் தம்மை அழைத்துக்கொண்ட ஏனைய இயக்கங்கள் அவர்கள் மீது வைத்த விமர்சனம், ‘விடுதலைப் புலிகள் இராணுவ சாகசங்களில் நம்பிக்கை கொண்ட தத்துவ வறுமையுடன் கூடிய சுத்த இராணுவக் கண்ணோட்டத்துடன் செயற்படும் இயக்கம்” என்பதே. இந்த விமர்சனம் ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், தாமும் ஏதொவொரு தத்துவத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்ற உந்துதல் புலிகளின் தலைமைப் பீடத்திடம் இருந்தமையை மறுக்க முடியாது. தேசியத் தலைவரே ஒத்துக்கொண்ட விடயம், தன்னைப் பெரிதும் கவர்ந்த நூல்கள் தமிழர்களின் பண்டைய பெருமையைக் கூறும் சரித்திர நவீனங்களே என்பதாகும். அதே வேளை, மார்க்சிய நூல்களை அவர் முற்றாகப் புறந்தள்ளி விடவில்லை. இந்த வேளையில்தான் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வரவு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியைப் புதிய பாதைக்குத் திசை திருப்பியது. இராணுவ ரீதியாக, சரியான திசையில் புலிகள் காய்களை நகர்த்திச் சென்ற போது, இராஜதந்திர ரீதியிலும் காய் நகர்த்த வேண்டிய தேவையை உணர்த்தி அதற்குச் செயல்வடிவம் தந்தவர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் என்றால் அது மிகையாகாது. எதிரியின் கோட்டைக்குள்ளேயே பிரவேசித்து அதிரடித் தாக்குதல்களை நடாத்தி எதிரியைப் பிரமிப்பில் ஆழ்ந்த போராளிகளால் முடிந்ததென்றால், ‘சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது, வீரம் மட்டுமல்ல, விவேகமும் தேவை” என்பன போன்ற ஏளனப் பேச்சுக்களைப் புறந்தள்ளி நாங்களும் கை தேர்ந்த இராசதந்திரிகளே என்பதை நிரூபிக்க அன்ரன் பாலசிங்கத்தின் வழி நடத்தல் உதவியது.

இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் நிலை கொண்டிருந்த காலத்தில் 1989 இல் கொழும்புக்குச் சென்று மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுடன் பேச்சு நடாத்தி தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் ஒரு சேரப் பிரமிப்பில் ஆழ்த்தியதில் அன்ரன் பாலசிங்கத்தின் பங்கு அளப்பரியது. எந்த எதிரியுடன் போர் புரிந்து கொண்டிருக்கிறார்களோ அந்த எதிரியின் தலை நகருக்கு சொந்த ஆயுதங்களுடன் சென்று பேச்சு நடாத்திய இயக்கம் என்ற பெருமையைப் பெற்றுத் தந்தவரும் அவரே.

அன்ரன் பாலசிங்கத்தின் வகிபாகம், தனியே விடுதலைப் புலிகளுக்கு இராஜதந்திர முகவரியைத் தேடித் தந்தவர் என்பதோடு மட்டும் முடிந்து விடவில்லை. மாறாக, போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்த புத்திஜீவிகள் சமூகம் கூட அன்ரன் பாலசிங்கத்தின் போராட்ட ஆதரவு காரணமாக ஈர்க்கப்பட்டு போராட்டத்தோடு தம்மைப் பிணைத்துக் கொண்டது. விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத இயக்கம் எனக் கூறப்பட்டுத் தடை செய்யப்பட்ட போதிலும் கூட அன்ரன் பாலசிங்கத்தால் லண்டன் இருந்து கொண்டே விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் என்றும், உத்தியோக பூர்வ பேச்சாளர் என்றும் செயற்பட முடிந்தது என்றால் இராஜதந்திர வட்டாரத்தில் அவர் தனக்கெனத் தேடி வைத்திருந்த தனியிடமே அதற்குக் காரணம். துரதிஷ்டவசமாக, மிகவும் தேவைப்படுகின்ற இன்றைய தருணத்தில் அவர் எம்மத்தியிலே இல்லாது போய் விட்டார்.

ஒரு மனிதரின் வாழ்வு என்பது அவன் வாழுகின்ற போதிலும், மறைந்த பின்பும் அதே கனதியுடன் நினைவு கூரப்படுகின்றதென்றால் அது அர்த்தமான வாழ்வாகின்றது. அந்த வகையில் தனக்கும் தான் சார்ந்த சமூகத்துக்கும் அர்த்தம் தரும் வாழ்வை வாழ்ந்த எமது தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் ஈழத் தமிழர் மனதைவிட்டு என்றும் அகலமாட்டார் என்பது சத்தியமான உண்மை.

**நிலவன்**

# பிராந்திய செய்திகள்

## வடக்கு ரயில் பாதையின் ஒருபகுதியை புனரமைக்க நடவடிக்கை

வடக்கு ரயில் பாதையில் மஹவ சந்தியிலிருந்து வவுனியா வரையிலான ரயில் பாதையை புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த பணியை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் அனுராதபுர பிரதேச போக்குவரத்து அத்தியட்சகர் நிரந்த விஸ்சுந்தர தெரிவித்தார். மஹவ சந்திக்கும் வவுனியாவிற்கும் இடையிலான வடக்கு ரயில் பாதையின் குறித்த பகுதி சுமார் நூறு வருடங்களாக உரிய முறையில் புனரமைக்கப்படவில்லை.

இதனால், ரயில்கள் அடிக்கடி தண்டவாளத்தை விட்டு தடம் புரள்கிறது. மேலும், நிர்ணயிக்கப்பட்ட வேகத்தில் ரயில்களை இயக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால், பயணிகளுக்கு சிறந்த ரயில் சேவையை வழங்க முடியாத நிலை காணப்படுவதாக அநுராதபுர பிரதேச போக்குவரத்து அத்தியட்சகர் குறிப்பிட்டார். மஹவ மற்றும் வவுனியாவிற்கு இடையிலான ரயில் பாதையை இரண்டு கட்டங்களாக புனரமைப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளதாக இதன்படி, மஹவ முதல் அனுராதபுரம் வரையிலும், அனுராதபுரத்திலிருந்து வவுனியா வரையிலும் இரண்டு கட்டங்களாக புனரமைக்கப்படவுள்ளன. அனுராதபுரத்திலிருந்து வவுனியா வரையான ரயில் பாதையின் முதற்கட்டப் பணிகள் அடுத்த வருடம் (2023) ஜனவரி 5ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால், ஜனவரி 5ஆம் திகதி முதல் வடக்கு ரயில் சேவையை அநுராதபுரம் வரை மட்டுப்படுத்த ரயில்வே அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இந்த ரயில் பாதையை புனரமைப்பதற்கு இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்க உள்ளது.




## ஹீட்டர் வெடித்து 3 மாத குழந்தை பலி!

அங்கொட, அம்பத்தல பகுதியில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்றரை மாத குழந்தையொன்று எரிந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் ஹீட்டர் வெடித்ததில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வீட்டில் இருந்த மற்றுமொரு குழந்தை ஹீட்டரைப் பயன்படுத்தியதாகவும், ஹீட்டர் வெடித்த போது தாய் வீட்டில் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹீட்டர் வெடித்ததையடுத்து குழந்தை இருந்த கட்டிலில் தீப்பிடித்து அறைக்குள் தீ பரவியுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## 11 நாட்களில் 25 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை

இந்த மாதத்தில் கடந்த 11 நாட்களில் 25 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். ரஷ்யா, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களே இவ்வாறு இம்மாதம் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

டிசம்பர் மாதத்தில் 25 ஆயிரத்து 24 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். ஆயிரத்திற்கு மேற்பட்டோர் ரஷ்யா, இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜேர்மன், அமெரிக்கா ஆகிய நாடுகளை சேர்ந்தோர் இந்த மாதத்தில் வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளி விபரங்களுக்கு அமைவாக , இந்த வருடத்தில் 6 இட்சத்து 53 ஆயிரத்து 11 சுற்றுலா பயணிகள் இலங்கை வருகை தந்துள்ளனர். இந்தியா, பிரிட்டன், ரஷ்யா, ஜேர்மன் பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த பெரும்பாலான சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இதேவேளை ஆகக்கூடுதலான சுற்றுலா பயணிகள் இந்த வருடம் மார்ச் மாதத்தில் இலங்கை வந்துள்ளனர்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைமுறையில் மாற்றம்!

ஞாயிற்றுக்கிழமை(18) நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்கான சகல நடவடிக்கைகளும் தற்போது தயார்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன, பகுதி இரண்டின் வினாப்பத்திரமே முதலில் வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களில் பகுதி ஒன்று வினாப்பத்திரமே முதலில் வழங்கப்பட்டது. பகுதி ஒன்று வினாப்பத்திரம் என்பது நுண்ணறிவு வினாக்களை கொண்டதாகும். பகுதி ஒன்று வினாப்பத்திரம் கடினமானது என்பதால் பாட விடயதானங்கள் அடங்கிய பகுதி இரண்டின் வினாப்பத்திரத்தை முதலில் வழங்குமாறு பெற்றோர்களால் கோரப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரவித்துள்ளார்.



## 1,000 பாடசாலைகளுக்கு இணைய வசதி

100 கோடி ரூபா செலவில், 1,000 பாடசாலைகளுக்கு இணைய வசதிகள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கல்வியை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அடுத்த பாடசாலை தவணையில் (3ஆம் தவணை) இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சில் அன்று (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போது நாடு முழுவதும உள்ள 100 கல்வி வலயங்கள், 120 கல்வி வலயங்களாக அதிகரிக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார். இவ்வாறு கல்வி வலயங்களை அதிகரித்ததன் பின்னர் ஆசிரியர்களின் நிர்வாகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது இலகுவாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாழ்வாதாரத்தை இழந்த வடக்கு, கிழக்கு மக்கள்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாடுகள் மற்றும் ஆடுகள் உயிரிழந்துள்ள நிலைமையின் கீழ் அங்கு வாழும் பலர் வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் பால் பொருட்கள் உட்பட கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளின் மூலம் தமது வாழ்வாதாரத்தை பேணுவதற்கு மாடு மற்றும் ஆடுகளையே அதிகம் பயன்படுத்துகின்றனர். எவ்வாறாயினும், அண்மையில் ஏற்பட்ட குளிரான வானிலை காரணமாக 1,800 மாடுகள் மற்றும் ஆடுகள் உயிரிழந்துள்ள நிலையில், இவற்றை வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தும் மக்கள் தற்போது மிகவும் அவல நிலைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திடம் "அத தெரண" வினவியது. இதன்போது, வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.சி.எச். கொத்தலாவல குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வாழ்வாதாரத்தை இழந்த மக்கள் குறித்த தகவல்களை சேகரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இந்த தகவல்களை ஆராய்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாடுகள் மற்றும் ஆடுகள் உயிரிழந்த நிலையில் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாடுகள் மற்றும் ஆடுகள் மோசமான வானிலையினால் உயிரிழந்துள்ளதாகவும், தொற்று நோயினால் அல்ல எனவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. இதன்படி, வட மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இறைச்சிக் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



## சாவகச்சேரியில் ஹெரோயினுடன் நபரொருவர் கைது


புத்தூர் சந்தி, தட்டாங்குளம் பகுதியில் இரண்டு கிராம் 550 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை இம் மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் அன்று(16) உத்தரவிட்டார். மேற்படி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியாக தகவலை அடுத்து அன்று (16) காலை 9.00 மணியளவில் அப் பகுதியில் சோதனை மேற்கொண்ட போது அப் பகுதியைச் சேர்ந்த 32 வயது சந்தேக நபரிடம் இருந்து இரண்டு கிராம் 550 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. சந்தேக நபர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவரை இம் மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஏ.ஜூன்சன் உத்தரவிட்டார்.

## பயிரிடப்படாத விளைநிலங்கள் 2023 இல் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் -மஹிந்த அமரவீர

இலங்கையில் பயிரிடப்படாத அனைத்து விவசாய நிலங்களும் 2023 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். ஐந்து வருட காலத்திற்குள் காணி சுவீகரிக்கப்படும் என அமைச்சர் அமரவீர தெரிவித்தார். அந்தந்த பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு விவசாயம் செய்ய நிலம் வழங்கப்படவுள்ளது.

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்ட அவர், இது தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு திருத்தப்படும் என்றார். அடுத்த அறுவடைக் காலத்தில், விளைச்சலை அதிகரிப்பதற்காக குறுகிய காலத்திற்கு இளைஞர்களுக்கு கையளிப்பதற்காக பயிர் செய்யப்படாத நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்த முடியும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். சுமார் 100,000 ஏக்கரில் நெற்செய்கைகள் தற்போது மேற்கொள்ளப்படவில்லை எனவும், நெல் பயிரிடப்படாவிட்டால் ஏனைய பயிர்களை பயிரிட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சினி துளிகள்






## லவ் டுடே படத்தில் நடித்த ராதிகாவின் சம்பளம்!

சமீபகாலங்களில் இளைஞர்களுக்கு பிடித்த இயக்குனராக இருப்பவர் பிரதீப் ரங்கநாதன். நவம்பர் 4ம் திகதி வெளியான "லவ் டுடே" படத்தை பிரதீப் இயக்கி, அதில் ஹீரோவாக நடித்திருந்தார். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக இவானா நடித்திருப்பார்.

மேலும் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் ராதிகா சரத்குமார், சத்யராஜ், யோகி பாபு, ரவீனா நடித்திருந்தனர்.

லவ் டுடே திரைப்படம் தமிழ் நாட்டில் மாபெரும் வெற்றி அடைந்த நிலையில், படத்தை தெலுங்கு மொழியிலும் ரிலீஸ் செய்தனர்.

AGS நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. 5 கோடி பொருட் செலவில் உருவாக்கப்பட்ட லவ் டுடே, தற்போது வரை 70 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளது.

இந்நிலையில் லவ் டுடே படத்திற்காக ராதிகா சரத்குமார் ரூ.15 லட்சம் சம்பளம் வாங்கியுள்ளார் என தகவல் வெளியாகிவுள்ளது.

## சினிமாவில் 20 ஆண்டுகளைக் கடந்த த்ரிஷா



சினிமாவில் பொதுவாக ஹீரோக்கள்தான் 70 வயதைக் கடந்தாலும் ஹீரோவாக நடித்துக் கொண்டு 20 வயது ஹீரோயின்களுடன் இன்னமும் டூயட் பாடுவார்கள். அதே சமயம் ஒரு ஹீரோயின் 30 வயதைக் கடந்தாலோ, அல்லது திருமணம் ஆகிவிட்டாலோ அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க மாட்டார்கள். அக்கா, அண்ணி, அம்மா வேடங்களை மட்டுமே கொடுப்பார்கள். இந்தக் காலத்தில் அதெல்லாம் கொஞ்சம் மாறியிருக்கிறது. 30 வயதைக் கடந்தவர்களும், திருமணமானவர்களும் வெற்றிகரமான ஹீரோயின்களாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போதுள்ள போட்டியில் ஒரு ஹீரோயின் 20 ஆண்டுகள் கடப்பது மிகவும் பெரிய விஷயம். அப்படி ஒரு சாதனையைச் செய்திருக்கிறார் நடிகை த்ரிஷா. 2002ம் ஆண்டு அமீர் இயக்கத்தில், சூர்யா நடித்து வெளிவந்த மௌனம் பேசியதே படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் த்ரிஷா. அதன்பின் தமிழ், தெலுங்கு மொழிகளில் முன்னணி ஹீரோக்களுடன் பல வெற்றிப் படங்களில் நடித்துள்ளார்.

இந்தாண்டு வெளியான பொன்னியின் செல்வன் படத்தில் குந்தவை கதாபாத்திரத்தில் நடித்து பாராட்டுக்களையும் பெற்றார் மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் தலா ஒரு படங்களில் நடித்து வருகிறார். தற்போது மலையாளத்தில் ராம் என்ற படத்தில் மோகன்லால் ஜோடியாக நடித்து வருகிறார்.

தமிழில் அவர் நடித்த முடித்த கர்ஜனை, சதுரங்க வேட்டை 2, ராங்கி ஆகிய படங்கள் இன்னும் வர வேண்டி உள்ளது. த ரோட் என்ற படத்தில் முதன்மைக் கதாநாயகியாக தற்போது நடித்து வருகிறார் 20 ஆண்டு பயணம் குறித்து, "எனது அன்புள்ள த்ரிஷாயன்ஸ், உங்களில் நானும் ஒருவராக இருப்பது குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன். நமக்கு என்றென்றும் வாழ்த்துகள். நமது முன்னோக்கிய பணத்திற்கு இன்றும் ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்யும் அனைத்திற்கும் நன்றி." என தனது ரசிகர்களையும், தன்னையும் ஒன்றாகக் குறிப்பிட்டு டுவிட்டரில் நன்றி தெரிவித்துள்ளார் த்ரிஷா.

## மீண்டும் வில்லன் அவதாரம் எடுக்கும் நடிகர் சத்யராஜ்

இயக்குனர் மோகன் டச்சு இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் "அங்காரகன்". ஜூலியன் மற்றி, ஜெரோமா இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்தில் ஸ்ரீபதி கதாநாயகனாக நடித்துள்ளார்.

இவர் திரைக்கதையை எழுதியுள்ளதுடன் கிரியேட்டிவ் இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

இந்த படத்தில் டெரர் போலீஸ் அதிகாரி கதாபாத்திரத்தில் சத்யராஜ் நடித்துள்ளார். மலையாள நடிகை நியா இந்த படத்தில் கதாநாயகியாக நடிப்பதன் மூலம் தமிழில் அறிமுகமாகிறார்.

மேலும் இதில் அங்காடித்தெரு மகேஷ், ரெய்னா காரத், ரோஷன், அப்புக்குட்டி, தியா, நேகா ரோஸ், குரு சந்திரன், கேசிபி பிரபாத் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

பீஸ்ட் படத்தில் இடம்பெற்ற பாடலான "ஜாலியோ ஜிம்கானா" உள்ளிட்ட 125-க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதிய கு.கார்த்திக் இந்த படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். கருந்தேள் ராஜேஷ் இந்த படத்தின் வசனங்களை எழுதியுள்ளார். "அங்காரகன்" 2023-ஆம் ஆண்டு வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.



## அவதார் 2 படம் முதல் நாளில் செய்த வசூல்

ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் நேற்று டிசம்பர் 16ம் திகதி வெளியான திரைப்படம் அவதார் 2.

இப்படத்திற்கு முதல் பாகத்தை தொடர்ந்து பெரிய எதிர்ப்பார்ப்பில் இருந்தது.

கொரோனா காரணமாக படம் இப்போது வெளியாகி இருக்கிறது. இல்லையென்றால் முன்பே வெளியாகி இருக்கும்.

ஆங்கிலத்தை தாண்டி பல மொழிகளில் இப்படம் டப் செய்யப்பட்டு வெளியாகி இருக்கிறது.

முதல் நாளில் படத்திற்கு நல்ல விமர்சனமும் வந்துள்ளது.

**முதல் நாள் வசூல்**

டிசம்பர் 15ம் திகதியே சில நாடுகளில் வெளியான திரைப்படம் அன்று(16) உலகம் முழுவதும் எல்லா நாடுகளில் வெளியாகி இருந்தது.

25 கோடி பட்ஜெட்டில் தயாரான இப்படம் முதல் நாளில் இந்திய மதிப்பில் ரூ. 800 கோடி வரை வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியாவில் மட்டுமே ரூ. 55 கோடி வரை வசூலித்ததாம்.



# பிரபாகரன் ஏன் போராட நிர்பந்திக்கப்பட்டார்?


சிங்களத் தலைவர்கள் பழைய தேசியக்கொடியையே புதிய தேசியக்கொடியாக வடிவமைத்தனர். இந்தக் கொடியை எதிர்த்து தமிழ்மக்கள் மஞ்சள் நிறத்திலான கொடியை தமது இடங்களில் ஏற்றினர். எஸ்.ஜே.வி செல்வநாயகம் என்ற தமிழ்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் தமிழர் தாயக கொடியினை ஏற்றி தனது காரில் பாராளுமன்றத்திற்கு சென்றார். பின் சிங்கள அரசு தேசியக்கொடியில் இரண்டு வர்ணங்களைச் சேர்த்து. பச்சை வர்ணம் முஸ்லிம்களையும், செம்மஞ்சள் தமிழர்களையும் குறிப்பதாக அமைந்தது. இப்படியாக இனவாதப்போராட்டம் சுதந்திரம் கிடைத்ததிலிருந்தே ஆரம்பமானது. இலங்கையில் உள்ள முக்கிய கட்சிகளும் பாரம்பரிய சிங்கள குடும்பங்களிலிருந்தே வந்தவையாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியை பொறுத்தவரையில், பண்டாரநாயக்க குடும்பம். ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரையில் D.S சேனநாயக்க குடும்பம். அதிகாரம்மிக்க பணக்காரர் குடும்ப வர்க்கத்தினை உடையவர்கள். அரசியலில் ஆளுமையை நிலைநிறுத்த குடும்பங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படும். தமிழர் பிரச்சினை ஒரு பகடைக்காயாக பயன்படுத்தப்படுகிறது. 1948ம் ஆண்டு பிரதமர் D.S சேனநாயக்க, இந்திய -பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந்திய வம்சாவழி தோட்டத்தொழிலாளர் குடியுரிமையை பறிக்கநினைத்தார். டிசம்பர் 10 பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்தது. 19 தமிழ் உறுப்பினர் எதிர்த்ததால் இச்சட்டத்தை தடுக்கமுடியவில்லை. ஒரேநாளில் 10இலட்சம் தமிழ்மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தினை உயர்த்த பல தலைமுறைகளாக உழைத்த தமிழர்களை தொடர்ந்தும் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் வலுக்கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற்றின. 1949ல் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை, வாக்குரிமை இல்லை என்றனர். பல தமிழர்கள் சிலோன் காங்கிரஸில் இருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியில் எஸ்.ஜே.வி செல்வநாயகம் தலைமையில் ஆரம்பித்தனர். 1953ல் அரசியல் ரீதியாக சேனநாயக்கவை புறந்தள்ள சிங்களவரும், தமிழர்களும் சமமானவர்கள் என கூறிய பண்டாரநாயக்கா தான் வெற்றிபெற்றால் 24மணித்தியாலயத்திற்குள் சிலோனை பௌத்த நாடாக மாற்றுவேன் என்றும், சிங்களம் மட்டுமே அரச மொழியாக இருக்கும் என்றும் சிங்களவர் அல்லாதோரின் ஆளுமைகள் ஒடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

1956ல் பண்டாரநாயக்கவின் ஓட்டுவங்கி அரசு வெற்றிபெற்றது. தன்னை சிங்கள இன பாதுகாவலன் என அறிவித்தார். அவரின் ஆட்சி இரு உறவுகளுக்குமிடையில் பெரிதும் பாதித்தது. சிங்களம் மட்டுமே அரச மொழி என சட்டம் இயற்றி, தமிழர் பகுதிகளுக்கும் இது பொருந்தும் என்றார். கம்யூனிஸ்ட் கட்சியின் சு.டீ சில்வா பாராளுமன்றத்தில் ஒரு மொழி என்றால் இரு நாடுகள் மலரும் என்று அழுதுகொண்டே கூறினார். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் ஆர்ப்பாட்டம் செய்தனர். சிங்கள இனவாதிகள் அவரைத் தாக்கினர். பின்னாளில் அரங்கேறப்போகும் இரத்தச்சரித்திரம் அன்று தான் ஆரம்பமாகியது. தமிழ் சிங்கள சட்டத்தினை எதிர்த்த கம்யூனிஸ்ட் கட்சியின் வீடுகள் தாக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்மக்களுக்காக குரல்கொடுப்பதை படிப்படியாக குறைத்துக்கொண்டது. ஜூன் 5.6ம் திகதிகளில் தமிழர் மீது முதற்தாக்குதல் ஆரம்பித்தது. பின்னர் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்திற்கும் பரவியது. 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல சொத்துக்களும் சூறையாடப்பட்டது. தமிழர்கள் தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்தனர். பின்னர் இலங்கையரசு மக்கள் தொகை விகிதாசாரத்தினை மாற்ற தீவிரமாக செயற்பட்டது. படிப்படியாகத் திட்டமிட்டு தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. இப்பகுதிகளில் சிங்களவரின் விகிதாசாரங்கள் அவர்களுக்குச் சாதகமாக அமையக்கூடியது. விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் 44 புதிய சிங்களக் கிராமங்கள் கிழக்குமாகாணத்தில் உருவாக்கப்பட்டது. அதில் 06 கிராமங்கள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் காடுகள் அழிக்கப்பட்டு நீர்ப்பாசன வசதிகள் உருவாக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் அமர்த்தப்பட்டது. தென்பகுதியில் மீனவர்களை சிங்கள அரசு இடையிடையே குடியமர்த்தியது. இத்தகைய குடியமர்த்தல்களே மோதல்களுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. மெதுமெதுவாய் உருவாக்கப்பட்ட கலவரங்கள், கோவிலில் உறங்கிக்கொண்டிருந்த குருக்களை தீமூட்டிக்கொழுத்திய சம்பவமும், தமிழர்களை உலுக்கிய மற்றுமொரு சம்பவமாக, ஒரு குழந்தையை கொதிக்கின்ற தாரில் போட்ட சம்பவமுமாகும். தமிழ் இளைஞர்கள், சிங்கள மக்களை ஏன் எதிர்த்து தாக்கக்கூடாது என்ற கேள்வியை எழுப்பினர். செல்வா தமிழர் மாநாடு ஒன்றினைக் கூட்டினார். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற இலங்கையரசிற்கு ஓராண்டு கால அவ காசம் வழங்கினார். ஜூலை 26.1957 அரசு ஒரு சமாதானத்திற்கு வந்து, பண்டாரநாயக்க செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதில் அரசின் சில வாக்குறுதிகளாக, தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை அரசு கைவிடும், தமிழ் மொழியும் அரச மொழியாக சட்டம் நிறைவேற்றப்படும், வடகிழக்கு மாகாணங்களில் பிராந்திய மொழியாக இருக்கும். பிராந்திய சபைச் சட்டங்கள் மூலம் பிராந்திய சட்ட உரிமைகள் வழங்கப்படும். ஜே.ஆர்.ஜெயவர்த்தன இதனை எதிர்த்து கொழும்பிலிருந்து கண்டியிலுள்ள பண்டாரநாயக்கவின் இல்லத்திற்கு நடை பயணம் மேற்கொண்டார்.

இதன் விளைவாக தமிழ் ஆட்சிமொழியானதே தவிர மற்ற எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 1958ல் தமிழர் பகுதிகளிலும் வாகனப் பதிவேட்டில் சிங்கள எழுத்துக்கள் பயன்படுத்தவேண்டும் என கேட்டுக்கொண்டது அரசு. தமிழர்கள் இதனை தார்கொண்டு மறைத்தனர். இதனால் மே 25ல் தமிழர்களுக்கெதிரான கலவரம் மீண்டும் ஆரம்பமாகியது. பொலநறுவையில் ஆரம்பித்து கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம் என பரவி 400 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து பண்டாரநாயக்கா தமிழர் பகுதிகளில் தமிழை மட்டும் பயன்படுத்த ஒப்புக்கொண்டார். இதனை எதிர்த்து பௌத்த துறவிகள் அவரின் இல்லத்தின் முன்னால் போராட்டங்களை நடத்தி, அவரை சிங்கள எதிரி என வர்ணித்து பண்டாரநாயக்கா செல்வா ஒப்பந்தத்தை கைவிடவும் வலியுறுத்தினர். இதனை எதிர்த்த தமிழர்களை இனவாதிகள் தாக்கினர். எங்கும் கலவரங்கள் இடம்பெற்றது. 1959ல் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் போக, எதிர்ப்புக்களை மீறி ஒப்பந்தத்தை அமுல்படுத்த முயன்றார். செப்டெம்பர் 25ல் சோமராம தேரர் என்ற பௌத்த துறவியினால் பண்டாரநாயக்கா அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார். 1960ல் பண்டாரநாயக்காவின் மனைவி சிறி மாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமரானார். ஜனவரி 01ல் தமிழர் பகுதிகளிலும் சிங்கள மொழியே அரச கரும மொழி என அறிவித்தார்.

ஜனவரி 02ல் செல்வா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு நாள் கடை அடைப்புக்கும் அழைப்புவிடுத்தார். இந்தப் போராட்டம் பல இடங்களுக்கும் பரவியது. அரச அலுவலகங்களுக்கு வெளியில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் போராட்டங்களை நடத்தினர். 50 நாட்களுக்கும் மேலாக இது தொடர்ந்தது. தமிழ்மக்கள் மீது பொருளாதாரத் தடையை ஏற்படுத்த, இலவச அரிசியினை வழங்க மறுத்தது அரசு. தந்தை செல்வா சட்ட எதிர்ப்பு போராட்டத்தினை அறிவித்தார். 1961 ஏப்ரல் 14 தமிழ் வருடப்பிறப்பன்று, தமிழர் பகுதிகளுக்கான தபால் சேவைகளை அறிவித்து தமிழீழ தபால் தலையை வெளியிட்டார் தந்தை செல்வா. பத்தாயிரத்திற்கும் மேலானோர் வரிசையில் நின்று அதனைப் பெற்றுக்கொண்டனர். ஏப்ரல் 17அன்று அவசரகாலநிலையை பிரகடனம் செய்து, அனைத்து தமிழ்த் தலைவர்களையும் கைது செய்து, 03 ஆண்டுகள் தடைசெய்தது இலங்கையரசு. 1965ல் இரண்டு கட்சிகளும் அரசமைக்க ஆசனங்கள் போதுமானதாக இல்லை. டட்லி சேனாநாயக்க தமிழரசின் ஆதரவினைக் கேட்க, செல்வாவிற்கு கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக டட்லி உறுதியளித்து ஆதரவினைப் பெற்றார். சில கட்சிகளின் தமிழீழ கோரிக்கைகளை செல்வா நிராகரித்தார். ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மாநிலம் போதும் என்றார். பம்பலபிட்டி பௌத்த விகாரையில் உள்ள பௌத்த பிக்குவின் அறிக்கையில், அரசு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு படைகளை அனுப்பி தமிழர்களை வெளியேற்றி சிங்களவர்களை குடியேற்ற வேண்டும் என்றார். அரசும் அவரின் கோரிக்கைகளை அமுல்படுத்த முனைந்தது. செல்வா அரசிற்கு வழங்கிவந்த ஆதரவினை திரும்பப்பெறமுற்பட்டார். டட்லி உடனே ஒரு சமாதானத்திற்கு வந்து இரண்டாவது முக்கிய ஒப்பந்தமான டட்லி செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. முந்தைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் தமிழர் பகுதிகளில் மாகாணசபைகள்



உருவாக்கப்படும் என்றும் உறுதியளித்தார். அரசு வெள்ளையறிக்கையிலும் இதனை வெளியிட்டது. மீண்டும் பௌத்த மதத்தினர் இதனை தடுத்தனர். 1968ல் ஒப்பந்தம் அமுலாக்கப்படாததை கண்டித்த செல்வா, அரசிற்கு கொடுத்து வந்த ஆதரவினை திரும்பப்பெற்றார். தமிழ் இளைஞர்கள் மிதமான போராட்டங்கள் இனி பயனளிக்கும் ஆயுதப்போராட்டமே பயனளிக்கும் என நினைக்க ஆரம்பித்தனர். இந்த எண்ணவோட்டத்திற்கு சிவகுமாரன் என்கின்ற இளைஞனே முக்கிய காரணமாக இருந்தார்.

1969ல் தமிழ் விடுதலை இயக்கம் குட்டிமணி, தங்கதுரை என்ற இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1970ல் சிறிமாவோ ஆட்சியமைத்தார். இந்தத்தேர்தலில் பிரிவினைவாதத்தை முன்வைத்த தமிழ்க்கட்சிகள் வெற்றி பெற முடியாமல் போயின. 1970-77 வரை தமிழர்கள் கலவரங்களுக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டனர். சிறிமாவோ தமிழ் பத்திரிகைகளுக்கும், தமிழ் புத்தக வெளியீடுகளுக்கும் தடைவிதித்ததோடு தமிழ்நாட்டிலிருந்து வரும் தமிழ்த் திரைப்படங்களுக்கும் தடைவிதித்ததோடு இந்தியாவினுடைய கலாசார இணைப்பைத் துண்டித்தார். தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவதிலுள்ள எண்ணிக்கையைக் குறைத்தார். ஒரே நுழைவுத்தேர்வு ஆனால் தமிழ் மாணவர்கள் 30வீத மதிப்பெண்களை அதிகம் பெறவேண்டும் என்ற இச்சட்டமே தமிழ் மாணவர் பேரவை ஆரம்பிக்க காரணமாக அமைந்தது. தமிழ் பகுதிகளுக்கும் இம்மாணவப் பேரவைகள் உதயமாகின. பின் நாட்களில் அரசியல் தலைவர்கள் இம்மாணவப்பேரவைகளில் இருந்து வரத்தொடங்கினர். சிலோனுக்கு புதிய அரசியற் சட்டம் அமைக்கும் குழுவில் செல்வாவும் அங்கம் வகித்தார். அரசியற் சட்டம் சிங்களவர்களுக்கு சாதகமாக உருவாக்கப்படுவதை அறிந்த அவர் அக்குழுவிலிருந்து விலகினார். மே14 1972ல் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து தமிழர் கூட்டணியை அமைத்து இலங்கை அரசியலுக்குள் சுயமாகநிலம் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். மே22 சிறிமாவோ புதிய அரசியற் சட்டத்தினை அறிமுகப்படுத்தினார். சிலோன் சிறிலங்கா என பெயர் மாற்றம் பெற்று பௌத்த சிங்கள தேசம் என அறிவிக்கப்பட்டதுடன் சிங்கள மொழி மட்டுமே அரச மொழியாக அறிவிக்கப்பட்டு, பௌத்தத்திற்கு தனி அந்தஸ்து வழங்கப்பட்டு சிறுபான்மையினருக்கு கொடுக்கப்பட்ட அரசியல் சட்ட பாதுகாப்பினை விளக்கினார். இதனை எதிர்த்த செல்வா உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து அடுத்த தேர்தலில் நிற்கப்போவதாகவும், சுய ஆட்சி கொண்ட தமிழ் மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் மக்கள் முன் வைக்கப்போவதாகவும், மக்கள் அவரை வெற்றிபெறச்செய்தால் சுயாட்சிதான் அவருடைய கோரிக்கை எனக்கொண்டு புதிய அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டும் என்றார். 1972-74 வரை நிலச்சீர்திருத்தச்சட்டத்தின் மூலம் தமிழர்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது. இதன் காரணமாக திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பில் சிங்கள மக்களின் தொகை அதிகரித்தது. 1973ல் அடுத்த திருப்புமுனையாக உலகத்தமிழர் ஆராய்ச்சி மாநாட்டிற்காக அரசினை நாடினர். அரசு ஒத்துழைக்க மறுத்தது. இதனை சவாலாக ஏற்று தாங்களே நடத்துவது என முடிவெடுத்தனர். 1974ல் மாநாட்டின் கடைசி நாளில் சிங்களவர்கள் கூட்டத்தினுள்ளே புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர். கலவரத்தில் 09பேர் மின்சாரம் தாக்கி இறக்க, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றனர். தமிழர் தம் தாய்மொழிக்கு எதிராக நடந்த அவமானம் என கருதினர். தமிழர் கூட்டணி அரசின் அடக்குமுறைகளுக்கும், விரைவான தீர்வுகளை எதிர்பார்க்கும் அரசியல் சினங்கொண்ட இளைஞர்களுக்கும் நடுவில் நின்று தவித்தது. இம்மாநாட்டிற்கு காரணமாகவிருந்த சிவகுமாரனும் அவரின் சகாக்களும் சந்திரசேகராவையும் யாழ்ப்பாண மேயர் துரையப்பாவையும் கொலை செய்யத் திட்டமிட்டனர். இரண்டு கொலை முயற்சிகளில் சந்திரசேகரா தப்பிவிட்டார். பொலிசார் சிவகுமாரனை துரத்திவர கரும்பு தோட்டத்தினுள்ளே ஓடியவரை துரத்திப்பிடித்த சயனைட் உட்கொண்டார்.

11ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

05ஆம் பக்க தொடர்ச்சி...

இலங்கையைத்திருப்திப்படுத்தவே ஈழத்தமிழர் தொடர்பான சிங்கள ஆட்சியாளர்களின் சமீபகால நகர்வுகளை அமைதியாக இந்த வல்லாதிக்க நாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாகத் தமது புவிசார் அரசியல், புவிசார் பொருளாதார நோக்கில் செயற்படும் இந்த வல்லாதிக்கச் சக்திகள், இலங்கைத்தீவில் எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக நிலவும் இன முரண்பாடுகள் பற்றிக் கவலைப்படுவதேயில்லை.

ஆனால் முடிந்த வரை சிங்கள மக்கள் விரும்பும் அரசியல் தீர்வுக்குத் தமிழர்கள் இணங்கிச் செல்ல வேண்டுமென வற்புறுத்தியும் வருகின்றன. 2002 சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்திலும் இந்த நிலைப்பாட்டோடு தான் குறித்த வல்லாதிக்க நாடுகள் செயற்பட்டுமிருந்தன.

ஆகவே இதற்குச் சரியான பதில் கொடுக்க வேண்டியது புலம்பெயர் தமிழர்கள் தான். குறிப்பாக இலங்கையில் முதலீடு செய்யலாம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கும் சில புலம்பெயர் வர்த்தகர்கள், சிங்கள ஆட்சியாளர்களின் நுட்பமான காய் நகர்த்தல்களையும், அது பற்றிய வல்லாதிக்கச் சக்திகளின் கள்ள மௌனத்தையும் ஆழமாக நோக்க வேண்டும். தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு மாத்திரமல்ல வடக்குக் கிழக்குச் சிவில்சமூக அமைப்புகளுக்கும் இந்தப்பொறுப்பு உண்டு. வெறுமனே ஆரவாரங்களுக்கும் பரபரபரப்புப் பேச்சுக்களுக்கும் இடமளித்து ஈழத்தமிழர்களின் சுயமரியாதையை இழக்கும் ஆபத்துக்களில் சிக்கிவிட முடியாது.

புலம்பெயர் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட பின்னணியிலே தான் இலங்கை வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவுக்கே முன்னுரிமை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருப்பதாக நம்பகமான உள்ளகத் கூறுகின்றன. இலங்கைக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் எட்டாம் திகதி வியாழக்கிழமை இந்திய நாடாளுமன்றத்தில் கூறியிருப்பதையும் அவதானிக்க வேண்டும்.

இந்தியாவை இலங்கை பல சந்தர்ப்பங்களில் இராஜதந்திர ரீதியாகவும், வர்த்தக ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டதன் ஊடாகவும் அவமானப்படுத்தியிருக்கின்றது என்று தெரிந்தும், "இலங்கைக்கு முக்கியத்துவம்" என்று அமைச்சர் ஜெய்சங்கர் கூறியிருக்கிறார் என்றால், இந்தியாவுக்கான முக்கியத்துவத்தை இலங்கை கொடுத்திருக்கிறது என்ற பின்புலத்தை அறியலாம். ஈழத்தமிழர்களை ஒற்றையாட்சிக்குள் முடக்கவும் புலம்பெயர் மக்களின் முதலீடுகளை உள்ளீர்க்கவும் இந்திய ஆதரவுத் தளத்தை நீட்ட வேண்டுமென ரணில் கருதியிருக்கலாம். இந்தியாவும் ஈழத்தமிழர் விவகாரத்தை இலங்கைக்கு எதிரான ஆயுதமாக்கித் தமக்குரிய புவிசார் நலன்களை அடைந்து வருகிறது என்பதும் புதிய விவகாரமல்ல.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு, தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசம் என்பதை உறுதிப்படுத்த எடுத்த முயற்சிகள் பற்றி அப்போது கொழும்பில் தூதுவராக இருந்த ஜே.என்.டிக்சிற் "கொழும்பு அசைமென்ற்" என்ற தனது நூலில் விரிவாக குறிப்பிட்டுள்ளார். ஜே.ஆர் எப்படிப் பிடிவாதமாக நின்றார் என்பது பற்றி டிக்சிற் தனது நூலில் விபரிக்கிறார்.

ஆகவே இக் காரண காரியங்களை ஈழத்தமிழர்கள் மிக நுட்பமாக அறிந்து காய் நகர்த்த வேண்டும். குறிப்பாக இந்தியாவைக் கையாளும் பொறிமுறை ஒன்றைக் கட்சி அரசியலுக்கு அப்பால் வகுக்க வேண்டும். வடக்குக் கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற கருத்தை அது பிரதிபலிக்கவும் வேண்டும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு, தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசம் என்பதை உறுதிப்படுத்த எடுத்த முயற்சிகள் பற்றி அப்போது கொழும்பில் தூதுவராக இருந்த ஜே.என்.டிக்சிற் - கொழும்பு அசைமென்ற் என்ற தனது நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஜே.ஆர்.ஜயவர்த்தன எப்படிப் பிடிவாதமாக நின்றார் என்பது பற்றி டிக்சிற் தனது நூலில் விபரிக்கிறார்.

ஆகவே மேலும் அது பற்றிய ஆழமான உள்ளக விபரங்களைப் பெற வேண்டியது தமிழ்த் தரப்புக்கு அவசியமானது. இன்றும் கூட அதே பிடிவாதத்துடனேயே சிங்கள ஆட்சியாளர்கள் நகருகின்றனர். ஆனால் தமிழ்த்தரப்பு தமது கோரிக்கையில் நிலையில்லாமலும் பிடிவாதம் இன்றியும், அதேநேரம் அவ்வப்போது சிங்கள ஆட்சியாளர்களுடன் கூட்டுச் சேர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கியும் செயற்பட்டமையினால், இந்தியா போன்ற நாடுகள் சிங்கள ஆட்சியாளர்களின் பக்கம் நின்று தமிழர் விவகாரத்தைக் கையாளுகின்றன. 2009 மே மாதத்திற்குப் பின்னரான ஈழத்தமிழ் அரசியல் பரப்பு திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்ட பொறிமுறை ஊடாகச்செயற்படவில்லை. இப்பலவீனங்களை அறிந்தே ரணில் புலம்பெயர் தமிழர்களிடம் முதலீடு செய்ய வருமாறு அழைத்திருக்கிறார் என்பதும் பகிரங்க உண்மை.

# நம்பிக்கை

ஒரு ஊரில் நல்லவன் ஒருவன் இருந்தான். எப்பொழுதும் தன்னால் இயன்ற வரை மற்றவர்களுக்கு உதவுவது அவனின் தன்மை. ஒரு நாள் சுற்றுலா சென்ற போது அவன் ஒருவன் மட்டும் சென்ற சிறு படகு கவிழ்ந்து விட்டது. கடல் நீரினால் அடித்து செல்லப்பட்ட அவன் யாருமே இல்லாத தீவு ஒன்றில் கரை ஒதுங்கினான். திகைத்துப்போனாலும் தன்னை காப்பாற்ற யாரேனும் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தான். அந்த பக்கமாக செல்லும் பெரிய கப்பல்களுக்கு சமிக்ஞை செய்ய தன்னிடம் இருந்த கைக்குட்டையை கொடியாக கட்டி வைத்தான்.

ஆனால் இரண்டு மாதங்கள் சென்ற பின்பும் அவனை காப்பாற்ற ஒருவரும் வரவில்லை. அவனின் நம்பிக்கை குறைந்தாலும் அந்த தீவில் வாழ தன்னால் இயன்ற அளவில் முயன்றான். அங்கே இருக்கும் வன விலங்குகளிடம் இருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள சிறு குடிசை ஒன்றை கட்டிக் கொண்டான். அங்கே கிடைத்த சிறு சிறு உணவு பொருட்களை தேடி கண்டுபிடித்து எடுத்து உண்டு பசியாறினான். ஒரு நாள் அதே போல் அவன் உணவு தேடிவிட்டு திரும்பிய போது அவன் மிகவும் கஸ்டப்பட்டு கட்டி இருந்த அந்த குடிசை மொத்தமாக எரிந்து சாம்பலாகி இருப்பதை பார்த்து திகைத்து போனான். குடிசை இருந்த இடத்தில் புகை மட்டுமே வந்து கொண்டிருந்தது. அவ்வளவு தான் அவனுக்கு கோபம் பொங்கியது விரக்தி மேலோங்கியது. கோபத்துடன் கத்தினான் நல்லது செய்த அவனுக்கு எல்லாமே தீங்காகவே நடப்பதாக அழுது புலம்பினான்.

அப்போது ஒரு பெரிய கப்பல் ஒன்று அவன் இருந்த தீவின் திசையில் வருவதை கண்டான் கைகளை வேகமாக அசைத்து அவன் கத்த அந்த கப்பல் மெல்ல அந்த தீவின் அருகே இருக்கும் கரையோரம் வந்து நின்றது. அவனால் நம்பவே முடியவில்லை. கப்பலில் இருந்து இறங்கி வந்த மாலுமியிடம் எப்படி அந்த தீவிற்கு வந்தார்கள் என ஆவலுடன் கேட்டான்.

எங்கள் கப்பல் தலைவன் எங்கிருந்தோ புகை வருவதை கவனித்து என்ன என்று தன்னுடைய தொலைநோக்கியில் பார்த்த போது நீங்கள் நட்டிந்த உதவி கேட்கும் கொடி அவர் கண்ணில் பட்டது. யாரோ உதவி கேட்கின்றார்கள் என்பதை புரிந்து கொண்டு இந்த பக்கம் கப்பலை திருப்பி வந்தோம் என்றான் அந்த மாலுமி.

வாழ்வில் நாம் சவால்கள், பிரச்சனைகள் என எத்தனை எத்தனையோ எதிர்கொள்ள வேண்டி இருக்கலாம். சில சமயம் நாம் நம் வாழ்வின் மோசமான நேரம் என்று நினைப்பது கூட blessing in disguise ஆக இருக்கலாம். எல்லாவற்றையும் இழந்து நிற்கும் நிலைமையிலும் நம்பிக்கையோடு இருந்தால் கட்டாயம் ஏதேனும் பாதை தெரியும்.

**இரவு நீண்டாலும் விடியல் தோன்ற தான் செய்யும்!**
**நம்பிக்கை தான் வாழ்க்கை!**



10 ஆம் பக்க தொடர்ச்சி...

தேசத்திற்காக செய் அல்லது செத்துமடி என்ற கோட்பாட்டிற்கு முதலில் வித்திட்டார். யாழ் மேயரைக் கொல்ல பல தமிழ் இளைஞர்கள் முயற்சித்த போதிலும் ஒரு தமிழ் இளைஞன் சுட்டுக்கொன்றார். அந்த இளைஞனே பின்நாளில் போர்வீரனாக வளர்ந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனாவார்.

1975ல் மூன்றாண்டுகள் காத்திருந்த செல்வா நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றிபெற்றார். இவ்வெற்றியை தமிழ்மக்களின் சுயஆட்சிக் கோரிக்கையாக ஏற்க அரசு மறுத்தது. மே 22 1976ல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் முன்னணி, தமிழர் விடுதலை முன்னணி என உருமாறியது. முதன் முறையாக இலங்கையரசின் கீழ் சுயஆட்சி என்ற கோரிக்கையை கைவிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கி சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். நவம்பர் 19ல் பாராளுமன்றத்தில் உருக்கமாக தந்தை செல்வா உரையாற்றினார்.

தமிழீழம என்ற கோரிக்கையை கைவிடுகின்றோம். ஒரு நாள் சுதந்திர தமிழீழம் மலரும் என்றார். ஏப்ரல் 29ல் தந்தை செல்வா அவர்கள் மாரடைப்பால் இறந்தார். அடுத்த பொதுத்தேர்தலில் சுதந்திர தமிழீழம் என்ற கோரிக்கைகைய தமிழர் விடுதலை முன்னணி மக்கள் முன் வைத்தது. சுதந்திர தமிழீழம என்ற கோரிக்கை 1972ல் புறந்தள்ளி மக்கள் இப்போது அதனை ஏற்று 82சதவீத வாக்குகளுடன் வெற்றி பெறச்செய்தனர்.

செல்வாவின் மறைவிற்கு பின் மிதவாத அரசியல் மெதுவாக பின்னடைவாக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள் தமிழ்த்தேசியக்கோட்பாட்டை முன்னெடுத்துச் சென்றனர். அடக்குமுறைச் சிங்கள இனவாதம் அதை விட அதிகாரமிக்க தமிழினத்தினை வளர்த்து விட்டது. பாகுபாடுகளை வளர்த்த சிங்கள அரசுகள் சிறுபான்மையினரை விளிம்பிற்குள் தள்ள 1980களில் உள்நாட்டுப் போர் தொடங்க காரணமாகவிருந்தது.

06ஆம் பக்க தொடர்ச்சி...

**கேள்வி : ஏனைய கட்சிகளை ஆதரித்துக்கொண்டிருக்கும் கட்சிகள் குறிப்பாக ரெலோ புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் கடந்த காலங்களிலே கொலை கொள்ளை கற்பளித்தல் போன்ற சம்பவங்களிலே ஈடுபட்டது என்பது தேர்தல் பிரச்சாரங்கள் மூலம் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் தேர்தல் பிரச்சாரங்களிலே ரெலோவும் புளொட்டும் தான் இணைந்து செயற்படுகின்றது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினாலும் தமிழரசுக் கட்சியினாலும் தேர்தல் காலங்களில் முன்வைக்கப்படும் கருத்து வாக்குகளை சேகரிப்பதற்காக இவர்கள் கொலை காரர்கள் கொள்ளைக்காரர்கள் கப்பம் கட்டுபவர்கள் என்று ஆகவே தொடர்ந்தும் அதில் பயந்துகொண்டிருப்பதில் எந்தவித பயனுமில்லை தானே, அப்படியெனில் தமிழ் ஆயுதம் தாங்கிய கட்சிகள் தனித்து போட்டியிட்டு தேர்தலிலே வரமுடியும் தானே?**

பதில் : பழைய சரித்திரங்களை பார்த்தால் இந்தியாவில் இருந்து வந்த தமிழ் மன்னர்கள் ஆண்டவர்கள் தான். இலங்கையிலுள்ள எல்லா இடங்களையும் பார்த்தால் தமிழ் தொடர்பான பழைய விடயங்களை எல்லாம் நாங்கள் விடவேண்டும் அதாவது ஒவ்வாத சில பழைய விடயங்களை கைவிட்டுவிட்டு தற்பொழுது நாங்கள் எந்த நிலையில் இருக்கின்றோம் அநுராதபுரத்தை எடுத்துக்கொண்டால் அது முன்னர் தமிழ் பிரதேசமாக இருந்தது.

எனவே நாங்கள் கேட்கலாம் அநுராதபுரத்தையும் தாருங்கள் என்று. இவற்றையெல்லாம் கேட்க முடியாது. தற்பொழுது நாங்கள் எந்த நிலையில் இருக்கின்றோம் அதனை வைத்துக்கொண்டு நாங்கள் தொடர்ந்தும் செயற்பட வேண்டும்.

**கேள்வி : இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் மக்களை குழப்ப நிலைக்கு தள்ளப்படும் சூழல் அல்லவா காணப்படுகின்றது?**

பதில் : அது தான், தேர்தல் முறையிலுள்ள ஒரு வேறுபாடும் இருக்கின்றது. பிரச்சனை என்னவென்றால் தேர்தலில் உள்ள வேறுபாடுகள் தான் இதற்கு முக்கிய காரணம் வேறொன்றுமில்லை.

# மகளிர் பக்கம்

## முகப்பருக்கள் மறைய எளிய வீட்டு வைத்தியம்..!

முகத்தைப் பளபளப்பாகப் பேணிக் காக்க வேண்டும் என்கிற எண்ணம் பெண்களுக்கு மட்டுமல்ல... ஆண்களுக்கும் உண்டு.. பொடுகுத்தொல்லை, உடல் சூடு காரணமாக முகப்பரு வரலாம்.

திருநீற்றுப்பச்சிலையை அரைத்து முகப்பரு உள்ள இடங்களில் தொடர்ந்து தடவி வந்தால் எளிதில் குணம் கிடைக்கும். திரிபலா பொடி கசாயத்தால் முகம் கழுவி வந்தாலும் பருக்கள் நீங்கும்.

குங்குமாதி லேபத்தைப் பருக்களின் மீது தடவி வர, பருக்கள் மறைவதோடு தழும்புகளும் விரைவில் நீங்கும்.

பசுஞ்சாணத்தில் செய்யப்பட்ட விபூதியை தண்ணீரில் குழைத்துத் தேய்த்துவந்தாலும் பருக்கள் மறையும்.

50 மில்லி நல்லெண்ணெயுடன் மிளகை ஊற வைக்க வேண்டும். 20 நாட்கள் கழித்துப் பயன்படுத்த வேண்டும். இதை முகப்பரு உள்ள இடங்களில் தடவி வர பருக்கள் நீங்கும்.

அரிசி மாவில் செய்யப்பட்ட நாமக்கட்டியை உரசி தொடர்ந்து பயன்படுத்தி வந்தாலும் இது நீங்கும்.

வெங்காயத்தைப் பொரித்தால் (போரக்ஸ்) அது மாவாகக் கரையும். அதைத் தண்ணீருடன் கலந்து பரு பழுத்திருக்கும் இடங்களில் தடவி வந்தால் விரைவில் பழுத்து உடையும்.

வெள்ளரிப் பிஞ்சை தக்காளி ஜூஸில் ஊற வைத்துத் தொடர்ந்து முகம் கழுவி வர விரைவில் பரு மறையும். அத்துடன் மீண்டும் முகப்பரு வருவதைக் கட்டுப்படுத்தும்.

மலச்சிக்கல் இருந்தாலும் முகப்பரு ஏற்படும். வெட்பாலை தைலத்தைப் பயன்படுத்தி வர மலச்சிக்கல் நீங்குவதோடு, முகப்பருவும் மறையும்.

பொடுகால் ஏற்படும் முகப்பருவுக்குப் பொடுதலை இலைச்சாற்றைத் தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்து வர பொடுகு நீங்குவதோடு, முகப்பருக்கள் சீக்கிரம் மறையும்.

எலுமிச்சைச் சாற்றுடன் நீர் சேர்த்து பரு உள்ள இடங்களில் தடவி இரண்டு முதல் மூன்று மணி நேரம் கழித்து முகம் கழுவ வேண்டும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் பருக்கள் மறையும். சருமத்தில் உள்ள எண்ணெய் பிசுக்கையும் எலுமிச்சைச் சாறு நீக்கும்.

இந்த முறைகளைப் பின்பற்றினால் முகப்பருக்கள் நீங்கிப் பொலிவுடன் வலம் வரலாம்.



## கிறிஸ்துமஸ் ஸ்பெசல்




## நாசி கோரிங்

தேவையானவை

எலும்பு நீக்கிய சிக்கன் 100 கிராம்
இரால் 100 கிராம்
முட்டை 2
சாதம் 2 கப்
சோயா சோஸ் 4 டேபிள் ஸ்பூன்
வெங்காயத்தாள் 100 கிராம் {spring onion}
வெங்காயம் 1
பூடு 2 பல்லு
இஞ்சி சிறிய துண்டு
எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன்
உப்பு தேவையான அளவு
காரம் தேவைப்படின் 1 டேபிள் ஸ்பூன் சில்லி சாஸ் சேர்க்கவும்
ஆயத்தம்

1.எலும்பு நீக்கிய சிக்கனை சிறிதாக அரிந்து கொள்ளவும்
2.முட்டையை உப்பு சேர்த்து அடித்து வைக்கவும்.
3.இஞ்சி பூண்டை அரைத்து வைக்கவும்
4.வெங்காயத்தை அரிந்து வைக்கவும்.
5.இரால் ஐ தோல் நீக்கி சுத்தம் செய்து வைக்கவும்.
6.சாதம் தயார் செய்து வைக்கவும்

செய்முறை



1.சட்டி சூடாகியதும் எண்ணெய் விட்டு வெட்டிய வெங்காயம் .இஞ்சி உள்ளி பேஸ்ட் என்பவற்றை உப்பு சேர்த்து வதக்கவும்.
2.சிக்கன் துண்டுகளையும் இறால் ஐயும் சேர்த்து கிளறவும்.
3. சிக்கன் .இறால் இரண்டும் வெந்ததும் முட்டையை சேர்த்து கிளறி அதனுடன் வெங்காயத்தாளையும் சோயா சோஸ் ஐயும் சேர்க்கவும்
4.இவற்றுடன் சாதத்தையும் சேர்த்து கிளறிவிட்டு இறக்கவும்.

வழமையாக fried rice ற்கு முட்டையை ஆம்லட் ஆக ஊத்தி இரண்டு பக்கமும் திருப்பி வேக விட்டு சிறிய சதுரங்களாக வெட்டி சேர்ப்போம் இதில் கட்டாயமில்லை

## வீட்டு அலங்காரக் குறிப்புகள்!

**கிறிஸ்துமஸ் மேசை விரிப்புகளை அலங்கரித்தல்**
**கிறிஸ்துமஸ் மலர் மாலை**
**கிறிஸ்துமஸ் வாசல் மணிகளை செய்தல்**
**கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரித்தல்**

சுவரில் மாட்டி வைக்கக்கூடிய மரத்தில் செய்யப்படும் கிறிஸ்துமஸ் மரம் மரத்தில் செய்யப்படும் கிறிஸ்துமஸ் மரம் குறைந்தபட்ச அழகைக் கொடுக்கும். அதே நேரம் வருடம் முழுவதும் அந்த கிறிஸ்துமஸ் மரத்தை சுவரிலேயே மாட்டி வைத்திருக்கலாம். மரத்தில் செய்யப்படும் கிறிஸ்துமஸ் மரத்தை செய்வது மிகவும் எளிது. அருகில் இருக்கும் மரக்கடைக்குச் சென்று மரப்பலகைகளை வாங்கிக் கொள்ள வேண்டும். அவற்றைத் தகுந்தவாறு செதுக்கி கிறிஸ்துமஸ் மரமாகச் செய்ய வேண்டும். பின் அவற்றை நமது வீட்டின் முக்கிய அறையின் சுவரில் மாட்டி வைக்க வேண்டும். அதோடு நமது விருப்பப்படி அந்த கிறிஸ்துமஸ் மரத்தை ஆபரணங்களால் அலங்கரிக்கலாம். பலவண்ண சிறிய மின்விளக்குகளால் கிறிஸ்துஸ் மரம் முழுவதும் நிரப்பலாம். அதோடு கிறிஸ்துமஸ் மரத்தைச் சுற்றி மெழுகுவர்த்திகளையும் ஏற்றி வைக்கலாம். அது மிக அழகாக இருப்பதோடு கிறிஸ்துமஸ் விழா மகிழ்ச்சியையும் நமக்குள் ஏற்படுத்தும். பலவண்ண சிறு மின்விளக்குகளால் சுவரை அலங்கரித்தல் பலவண்ண சிறு மின்விளக்குகளாலான நீண்ட சரம் ஒன்றை வாங்கிக் கொள்ள வேண்டும். அதை கிறிஸ்துமஸ் மரம் போன்ற வடிவில் நமது குழந்தைகளின் படுக்கை அறையின் சுவற்றில் ஒட்டி வைக்க வேண்டும். இப்போது அந்த மின்விளக்கு சரத்தை எரியவிட்டால் நமது குழந்தைகள் மகிழ்ச்சியால் துள்ளி மகிழ்வர். மேலும் அவர்களுக்கு தமக்கு சொந்தமான கிறிஸ்துமஸ் மரம் என்ற உணர்வும் ஏற்படும்.

பனிசீவல்கள் மற்றும் நட்சத்திரங்களைச் செய்தல் நமது வீட்டின் தாழ்வாரத்தின் கூரையிலிருந்து பலவண்ண அட்டைத்தாள்களில் செய்யப்பட்ட நட்சத்திரங்களையும், ஐஸ்க்ரீம் குச்சிகளிலிருந்து செய்யப்பட்ட பலவண்ண பனிசீவல்களையும் தொங்கவிட்டால் தாழ்வாரமே ஒரு சொர்க்கபுரியாகத் தெரியும்.

## சாக்லேட் கேக்

**முட்டை இல்லாத சாக்லேட் கேக் செய்ய தேவையான பொருட்கள்**

1/2 கப் பால்
1 தேக்கரண்டி எலுமிச்சை சாறு
1 கப் மைதா மாவு
1/4 கப் கொக்கோ பவுடர்
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்
3/4 கப் சர்க்கரை
5 தேக்கரண்டி எண்ணெய்
1 தேக்கரண்டி வெண்ணிலா எசன்ஸ்

**முட்டை இல்லாத சாக்லேட் கேக் செய்முறை**

1. ஒரு பாத்திரத்தில் அரை கப் பால் சேர்த்து, அதனுடன் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு சேர்த்து கலக்கவும்.

2. நன்கு கலந்து பின்னர் தனியே எடுத்து வைக்கவும்.

3. ஒரு அகலமான பாத்திரத்தில் மேலே ஒரு ஜல்லடை வைத்து, ஒரு கப் மைதா மாவு, கால் கப் கொக்கோ பவுடர், ஒரு தேக்கரண்டி பேக்கிங் பவுடர், ஆகியவற்றை சேர்க்கவும்.

4. கட்டி இல்லாமல் சலித்துக் கொள்ளவும்.

5. அதனுடன் முக்கால் கப் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

6. எல்லாவற்றையும் நன்கு கலந்து பின்னர் நாம் தயாராக வைத்துள்ள பால் மற்றும் எலுமிச்சை சாறு கலவையை அதனுடன் சேர்க்கவும்.

7. மேலும் 5 தேக்கரண்டி எண்ணெய், ஒரு தேக்கரண்டி வெண்ணிலா எசன்ஸ், ஆகியவற்றை சேர்த்து கலக்கவும்.

8. தேவைப்பட்டால் சிறிதளவு பால் கலந்து தோசை மாவு பதத்திற்கு கரைத்துக் கொள்ளவும்.

9. ஒரு அகலமான பாத்திரத்தில் உள்ளே stand வைத்து மூடி வைக்கவும் அல்லது ஓவன் இருந்தால் ஓவன் இருந்தால் 180C/360கு ப்ரீ ஹீட் செய்து கொள்ளவும்.

10. இப்பொழுது ஒரு சிறிய பாத்திரத்தில் எண்ணெய் அல்லது வெண்ணெய் தடவி கொள்ளவும்.

11. தயாராக வைத்துள்ள கேக் மாவை அதனுடன் சேர்க்கவும்.

12. இப்பொழுது இப்பொழுது பாத்திரத்தினுள் வைத்து நான் 40 முதல் 50 நிமிடங்களுக்கு வேக வைக்கவும் அல்லது oven பயன்படுத்தினால் 40 முதல் 45 நிமிடங்களுக்கு வேக வைக்கவும்.

13. 50 நிமிடங்களுக்கு பிறகு ஒரு சிறிய குச்சியை கொண்டு கேக் மாவை குத்தவும் மாவு ஒட்டாமல் வந்தால் தயாராக உள்ளது.

14. சுவையான மற்றும் மென்மையான சாக்லேட் கேக் தயார்.



**எலுமிச்சை சாறு மற்றும் தக்காளி சாற்றை சம அளவு எடுத்து கலந்து, ஒரு நாளைக்கு இரண்டு முறை தடவி வந்தால், கருவளையங்கள் குறைந்துவிடும். தினமும் படுக்கும் முன்பு, வைட்டமின் ஈ மற்றும் சி நிறைந்த க்ரீம்களை தடவி வந்தால், கருவளையம் போய்விடும்.**

# கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

**"இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர், உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."**

கிறிஸ்துமஸ் என்றாலே பரலோகத்தில் (Heaven) மகிழ்ச்சி. பூலோகத்தில் (Earth) சமாதானம் என்பதாகும். கிறிஸ்துமஸ் என்பது இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அனுசரிக்கும் நாளாகும். ஆதிச் திருச்சபையினர் கிறிஸ்துவின் பிறப்பை டிசம்பர் 25-ம் திகதி கொண்டாடுவது என்று முடிவெடுத்தனர். இந்நாள் சரித்திரத்தில் புகழ்பெற்ற நாளாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இயேசுவின் பிறப்பை வைத்து தான் கி.மு. என்றும், கி.பி. என்றும் வரலாற்றின் காலம் கணிக்கப்படுகிறது.

### உலக ரட்சகர் :

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை உலகிற்கு முதன்முதல் அறிவித்தவன் கர்த்தருடைய தூதன் என்பதை விவிலிய நூலில் இவ்வாறு காணலாம்.

"இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர், உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்". (லூக் 2 : 10-11)

இயேசு இவ்வுலகின் ரட்சகர் என்பதை அவர் பிறப்பின் செய்தியிலேயே அறிவிக்கப்பட்டு விட்டது. இயேசுபிரான், இஸ்ரேல் நாட்டிலுள்ள எருசலேம் நகருக்கு 10 கி.மீ. தெற்கே உள்ள பெத்லகேம் என்ற சிற்றூரில் புறநகர் பகுதியில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார் என்பது வரலாறு. ஆனால் அவர் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கோ, சாதியினருக்கோ, இனத்திற்கோ, உலகில் உள்ள ஒரு பகுதியினருக்கோ சொந்தமானவர் அல்ல. இதில் ஒரு சந்தேகமுமில்லை. ஏனென்றால் அவர் இவ்வுலகில் உள்ள அனைவருக்கும் சொந்தமான ரட்சகர் என்பதை அவர் பிறப்பின் நற்செய்தி தெளிவாகக் கூறுவதைக் காணலாம்.

### சமாதானப் பிரபு :

இந்த தூதர்கள் கூறிய மற்றுமொரு பிறப்பின் செய்தி என்னவென்றால், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்பதாகும். (லூக் 2 : 14).

இச்செய்தியில் பூமிக்கு பொதுவாக குறிப்பிட்டிருப்பது சமாதானமாகும். இச்சமாதானம் இப்பிரபஞ்சத்தின் இயல்பான எதிர்பார்ப்பு என்பதில் ஐயமில்லை. நமக்கு மனதில் சமாதானம் வேண்டும். உடலில் சமாதானம் வேண்டும். குடும்பத்தில் சமாதானம் வேண்டும். அயலகத்தில் சமாதானம் வேண்டும். நம் நாட்டில், உலகில் சமாதானம் என்று எங்கும் சமாதானம் தேவை என்பதை நாம் அறிவோம்.

இயேசுபிரான் பிறந்த நாட்களில் ரோம அரசனாக இருந்தவர் அகஸ்துராயன் (Agustus Ceasar). அன்று வாழ்ந்த எழுத்தாளர்களில் எபிக்டெடஸ் (Epictetus) என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் ரோம அரசனைப் பற்றி குறிப்பிடும் போது, அகஸ்துராயனால் தரையிலும், கடலிலும் நடக்கும் யுத்தங்களிலிருந்து மக்களுக்கு சமாதானம் கொடுக்க முடியுமே தவிர, மக்களின், கவலை, உணர்ச்சி, வேதனை நிமித்தம் சமாதானம் கொடுக்க இயலாது என்று அவர் கூறியுள்ளார்.

எனவே, இந்த உலகம் தரக்கூடாத சமாதானத்தை கொடுக்கவே இயேசு இவ்வுலகில் வந்தார் என்பதை நாம் விவிலிய நூலில் காணலாம். (யோவான் 14 : 27)

மேலும், இயேசுபிரான் உலகில் பிறக்கப் போகிறார் என்று அவர் பிறப்பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன் உரைத்த தீர்க்கதரிசியான ஏசாயா, இயேசுவை சமாதானப் பிரபு என்று கூறியிருப்பதையும் விவிலிய நூலில் இவ்வாறு காணலாம்.

அவர் நாமம் : அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு எனப்படும்.
(ஏசாயா 9 : 8)

### முன் குறிக்கப்பட்டவர் :

உலக வரலாற்றில் இப்போது எத்தனையோ தலைவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவதைப் பார்க்கிறோம். ஆனால் யாருமே அவர்களை குழந்தையாகப் பாவித்துக் கொண்டு கொண்டாடுவதை நாம் காண்பதில்லை. இயேசு இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார் என்பதை வரலாற்றின் மூலம் அறிகிறோம். இது ஒரு எதிர்பாராத விபத்தல்ல. அவரின் பிறப்பை உலகம் முழுவதும் பேச்சு, நடை, பாடல் என்று பல வழிகளில் அறிவிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறது. அதில் ஒன்று இயேசுவை குழந்தையாக கொண்டாடப்படுவதை யாரும் மறுக்க முடியாது. ஏனென்றால் அவர் பிறக்கும்போதே மீட்பராக வெளிப்பட்டார். இயேசு என்னும் மன்னர்களின் மன்னன் யாரிடத்தில், எந்த வம்சத்தில், எங்கு பிறக்கப் போகிறார் என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உரைக்கப்பட்டுவிட்டதை விவிலியம் இவ்வாறு கூறுகிறது.

ஏசாயா 7 : 14 - "ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்".

மீகா 5 : 2 - "இஸ்ரேலை ஆளப் போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்".

ஏசாயா 9 : 7 - "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி... சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்".

இது மட்டுமல்ல, இயேசு பிறப்பதற்கு முன், அவருடைய தகப்பனாகிய யோசேப்புக்கு கர்த்தருடைய தூதன் தோன்றி சொப்பனத்தில் வெளிப்படுத்தியதாவது :

மத்தேயு 1 : 21 - "அவள் (மரியாள்) ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான், என்பதாகும்.

### பிரபஞ்ச மன்னனும், பூலோக மன்னனும் :

இப்பிரபஞ்ச அரசனான இயேசுவுக்கு பிறப்பிலிருந்தே எதிர்ப்பு இருந்தது. இயேசு பிறந்த போது ஏரோது மன்னன் ஆட்சியிலிருந்தான். இப்பிரபஞ்ச அதிகாரியான இயேசுவின், அவரின் படைப்பான நட்சத்திரம் ஒன்று இவ்வுலகிற்கு இயேசுவை வரவேற்பது போல வானில் தோன்றியது. இதைக் கண்ட அந்நாட்டு ஞானிகள் ஏதோ, அரசர் பிறந்து விட்டார் என்று ஏரோது அரசனின் அரண்மனைக்குச் சென்று விசாரித்தனர். ஆனால் அங்கு அரச புதல்வன் பிறக்கவில்லை என்பதை அறிந்தனர். இச்செய்தியை கேட்ட ஏரோது மன்னன் கலக்கமடைந்தான். தன் நாட்டில் வேறொரு அரசன் பிறந்திருப்பது அவனுக்கு திகிலை உண்டாக்கியது. ரகசியமாக ஞானிகளை அழைத்து, பிள்ளை பிறந்த காலத்தை கேட்டறிந்தான். பிள்ளையை அவர்கள் விசாரித்துக் கண்ட பின் அவனிடம் அறிவிக்கச் சொல்லி அனுப்பி வைத்தான்.

ஞானிகள் நட்சத்திரத்தைப் பின் தொடர்ந்து இயேசு பிறந்த இடத்தை அடைந்தனர். தாங்கள் கொண்டு வந்த பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் போன்ற காணிக்கைகளை வைத்து வணங்கினர். ஆனால், திரும்ப ஏரோதுவிடம் போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டனர்.

ஆகவே, வேறு வழியாக தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள். இந்நிலையில் கர்த்தரின் தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்கும் காணப்பட்டு, ஏரோது கொலைச் செய்யத் தேடுவான். ஆகையால் பிள்ளையை கூட்டிக் கொண்டு எகிப்துக்கு ஓடிவிடச் சொன்னான். யோசேப்பும் அப்படியே செய்தான்.

ஏரோது, தான் ஞானிகளால் ஏமாற்றப்பட்டதை அறிந்து கோபமடைந்து, ஞானிகளிடம் விசாரித்த காலத்தின் படி இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலைச் செய்தான். ஏரோதின் ஆணை இறையரசர் இயேசுவின் உலக வாழ்க்கைப் பயணத்தை தடுக்க முடியவில்லை.

இயேசுபிரான் வாழ்ந்த நாட்களில் அவர் காட்டிச் சென்ற வழிமுறைகளை பின்பற்றும் மக்கள் தங்கள் எண்ணங்களும் செயல்களும் மாறி அவர்கள் புதிய வாழ்க்கைமுறையை பின்பற்றுகின்றனர். அது மக்களின் செயல்களுக்கு விளக்கம் கூறி தீமையிலிருந்து விலகி வாழ்வதற்கு வழி செய்கிறது. இதனால் உலக பண்பாட்டில் மாற்றமும், நாகரீக வளர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது.

உலகமெங்கிலும் டிசம்பர் 25-ம் திகதி கிறித்துவர்களும், அவரைப் பின்பற்றுவோரும் இயேசுவின் பிறப்பை ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகின்றனர். இயேசு பிறந்த போது வானில் தோன்றிய நட்சத்திரத்தின் அடையாளமாக, தங்கள் வீடுகளில் பெரிய நட்சத்திரங்களைக் கொண்டு அலங்கரித்து தங்கள் வீடுகளிலும் இயேசு பிறந்திருக்கிறார் என்று அறிவித்து மகிழ்கின்றனர் என்பதை நாம் காணலாம்.



# விளையாட்டு

## டென்னிஸ் நட்சத்திரம் போரிஸ் பெக்கர்

நிதி மோசடி குற்றச்சாட்டில் 8 மாதங்களாக சிறையிலடைக்கப்பட்டிருந்த, உலகின் முன்னாள் முதல் நிலை டென்னிஸ் வீரரான போரிஸ் பெக்கர் பிரித்தானிய சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தாயகமான ஜேர்மனிக்கு நாடு கடத்தப்படவுள்ளார்.

1985 ஆம் ஆண்டு, 17 வயதில் விம்பிள்டன் ஒற்றையர் சம்பியன் பட்டத்தை வென்று, இப்பட்டத்தை வென்றதன் மூலம், இப்பட்டத்தை வென்ற மிக இளமையான ஆணாக சாதனை போரிஸ் பெக்கர் விளங்குகிறார். 3 விம்பிள்டன் பட்டங்கள் உட்பட 6 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள், ஒலிம்பிக் தங்கப்பக்கம், 13 மாஸ்ட்டர் பட்டங்களை வென்றவர் அவர்.

2002 ஆம் ஆண்டு வரிமோசடி குற்றச்சாட்டில் பொரிஸ் பேக்கருக்கு ஜேர்மன் நீதிமன்றம் அவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்திருந்தது. ஸ்பெய்னிலுள்ள தனது சொத்துகள் மீது பெறப்பட்ட கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், 2017 ஆம் ஆண்டு பிரித்தானிய நீதிமன்றத்தில் அவர் வங்குரோத்து அறிக்கை தாக்கல் செய்தார்.

இதன் போது 2.5 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் பெறுமதியான சொத்துகளை அவர் மறைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கில் போரிஸ் பெக்கருக்கு 30 மாத சிறைத்தண்டனை விதித்து பிரித்தானிய நீதிமன்றம் கடந்த ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்தது. அதையடுத்து, லண்டன் வான்ட்ஸ்வோர்த் பகுதியிலுள்ள சிறைச்சாலையில் போரிஸ் பெக்கர் அடைக்கப்பட்டிருந்தார். அவர் தண்டனைக் காலத்தின் அரைப்பகுதியை சிறையில் கழிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், 55 வயதான போரிஸ் பெக்கர், நாடு கடத்தப்படுவதற்காக பிரித்தானிய சிறையிலிருந்து அன்று வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளார் என பிரித்தானிய ஊடகங்கள் அன்று (15) தெரிவித்துள்ளன. பிரித்தானிய சிறையில் இடநெருக்கடியை குறைப்பதற்காக, குற்றமிழைத்தவர்களை அவர்களின் சொந்த நாட்டுக்கு நாடு கடத்தும் திட்டத்தின் கீழ் போரிஸ் பெக்கர் விடுவிக்கப்படவுள்ளார் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர் ஜேர்மனிக்கு நாடு கடத்தப்பட்ட பின்னர் எஞ்சிய சிறைத்தண்டனைக் காலத்தை சிறையில் கழிக்க வேண்டியதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



## ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிர்வாக சபைத் தேர்தல் குழு

நாட்டில் நடைமுறையில் உள்ள விளையாட்டுத்துறை சட்ட விதிகள் மற்றும் யாப்பு விதிகளுக்கு அமைய ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் வருடாந்த தேர்தல் அடுத்த வருடம் மே மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த விதிகளுக்கு அமைய நிருவாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துவதற்காக மூவர் அடங்கிய தேர்தல் குழுவை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் நியமித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற ஓய்வுநிலை நீதிபதி, நீதியரசர் மாலனி குணரட்ன, மேல் நீதிமன்ற ஓய்வுநிலை நீதிபதி, நீதியரசர் ஷிரோமி பெரேரா, இலங்கை நிருவாக சேவை ஓய்வுநிலை அரச அதிகாரி சுனில் சிறிசேன ஆகியோரை தேர்தல் குழு உறுப்பினர்களாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் நியமித்துள்ளது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அதிவிசேட பொதுக் கூட்டம் வியாழக்கிழமை (15) நடைபெற்றபோது தேர்தல் குழு உறுப்பினர்கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

2023 மே மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது புதிய நிருவாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை தேர்தல் குழுவினர் நடத்தவுள்ளனர்.




## கட்டாரின் கால்பந்து அரங்கை சூடாக்கிய இவானா நோல்

கவர்ச்சியாலும் சர்ச்சையான கருத்துக்களாலும் மிகவும் பிரபலமான குரோஷிய மொடல் இவானா நோல், குரோஷியா - அர்ஜென்டினா இறுதி ஆட்டத்தைக் ரசிக்க மைதானத்திற்கு வருகை தந்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இவானா 2016 ஆம் ஆண்டு மிஸ் குரோஷியா பட்டத்தையும் வென்றுள்ளார். அவரது அழகும் கவர்ச்சியான உடைகளும் இந்தப் போட்டியில் பலரின் கவனத்தை ஈர்த்தது. இருப்பினும், கடுமையான மத விதிகளால் நிர்வகிக்கப்படும் கட்டாரில், இவானாவின் கவர்ச்சியான ஆடைகள் குறித்து சில கருத்துக்கள் உள்ளன, மேலும் சிலர் அவரை மைதானங்களில் இருந்து தடை செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளனர். ஆனால் அதையெல்லாம் பொய்யாக்கிவிட்டு, வழக்கம் போல் கவர்ச்சியான உடை அணிந்து, உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியைக் காண இவானா வந்தார்.

இருப்பினும், தனது அணியின் தோல்விக்குப் பிறகு, அந்த நாள் தனது அணிக்கு வெற்றிகரமான நாளாக அமையவில்லை என்று மீடியாக்களிடம் கூறினார். "மேலும் "கட்டாரில் எனது ஆடைகளை ரசிகர்கள் மதித்த விதம் எனக்கு மிகவும் ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது" எனக்கு இதுவரை எந்த மோசமான எதிர்வினையும் இல்லை, ஒன்று . பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என்னுடன் படம் எடுத்துக்கொள்கிறார்கள். நான் நிறைய பேருடன் புகைப்படங்கள் எடுத்திருக்கிறேன், எல்லோரும் என்னைப் பார்ப்பதில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். என்றும் தெரிவித்துள்ளார்





## அமெரிக்க மகளிர் கிரிக்கெட் அணியில் அனைவருமே இந்திய வம்சாவளி பெண்கள்

தென்னாபிரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் அமெரிக்க வீராங்கனைகளின் பெயர் பட்டியலை அந்த நாட்டின் கிரிக்கெட் சபை அண்மையில் அறிவித்தது.

அதன்படி 15 பேர் கொண்ட அந்த அணியின் அனைத்து வீராங்கனைகளும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.இது சமூக வலைத்தளங்களில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது. இந்த நிலையில் ரசிகர்கள், இது அமெரிக்க அணியா? அல்லது இந்திய 'பி' அணியா என நகைச்சுவையுடன் பதிவிட்டு வருகின்றனர்.



# உலக வலம்

## ஜப்பானில் குழந்தை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு 5 இலட்சம் யென் மானியம் !

ஜப்பானில் கடந்த சில ஆண்டுகளாக பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைந்து வருகிறது. இறப்புகள் அதிகம் இருப்பதால், அங்கு மக்கள் தொகை வேகமாக குறைந்து வருகிறது. கடந்த ஆண்டு அந்நாட்டில் 8.11.604 பிறப்புகளும் 14.39.809 இறப்புகளும் பதிவாகின.

இந்நிலையில், நாட்டில் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க ஜப்பான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, குழந்தை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு பல்வேறு சலுகைகளை அரசாங்கம் வழங்குகிறது.

அதன் ஒரு பகுதியாக, குழந்தை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு 4.20.000 யென் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், இந்த மானியத்தை 80.000 யென் அதிகரித்து 5 இலட்சம் யென்னாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தகவலை அந்நாட்டின் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அதிக அளவில் தரவுகள் திருடப்படும் 5 நாடுகள்

இந்தியாவில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 26.5 கோடி கணக்குகளில் தரவுகள் திருடப்பட்டுள்ளதாக ஆய்வுத் தகவல் வெளியாகியுள்ளது. சர்ஃப்ஷார்க் என்ற தரவு பாதுகாப்பு கண்காணிப்பு நிறுவனம் நடத்திய ஆய்வின் முடிவில் இந்த அதிர்ச்சித் தகவல் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் கடந்த 2002 முதல் 2022 அக்டோபர் வரை இணைய பாதுகாப்பு குறித்து சர்ஃப்ஷ ார்க் நிறுவனம் சார்பில் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் முடிவில் இந்தியாவில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 9 இந்தியர்களின் தரவுகள் திருடப்படுவதாக தெரியவந்துள்ளது.

இந்த காலாண்டில் மட்டும் 73.8 லட்சம் கணக்குகளில் இணைய தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இந்தியாவைப்போன்று அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளும் அதிக அளவில் சைபர் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

அமெரிக்காவில் கடந்த 2004 முதல் 204 கோடி கணக்குகளில் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவில் 202 கோடி கணக்குகளில் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மேலும் தரவுகள் அதிக அளவில் திருடப்படும் 5 நாடுகளில் இந்தியாவுன் ஒன்று எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது. சமீபத்தில் தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை இணையதளம் முழுவதுமாக ஹேக்கர்களால் முடக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஐசிஎம்ஆர் இணையதளத்தை முடக்கவும் 6 ஆயிரத்துக்கும் அதிகமான முறை முயற்சிகள் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு – காஷ்மீரில் ராணுவ முகாம் அருகே துப்பாக்கிச்சூடு

ஜம்மு - காஷ்மீரின் ரஜோரி பகுதியில் உள்ள ராணுவ முகாமின் வாசல் அருகே வெள்ளிக்கிழமை காலையில் நடந்த துப்பாக்கிசூடு சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர், ஒருவர் காயமடைந்தார். இதனைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டும் என்று கோரி ராணுவ முகாம் அருகே பொதுமக்கள் போரட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் குறித்து மூத்த காவல் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ராணுவ முகாமின் காவலாளி அடையாளம் தெரியாமல் தவறுதலாக சுட்டதில் அவர்கள் உயிரிழந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர். இதனை மறுத்துள்ள ராணுவம், அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவரும் கொல்லப்பட்டதாக ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், உயிரிழந்தவர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் ரஜோரி மாவட்டத்தில் உள்ள பால்யன் பகுதியில் வசித்து வந்த ஷாலிந்தர் குமார், கமல் கிஷோர் என்பது தெரிய வந்துள்ளது. இவர்கள் இருவரும் ராணுவத்தில் சுமை தூக்கும் வேலை செய்து வந்ததாகவும், காயமடைந்தவர் பொதுஜனம் என்றும் ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பொதுமக்களின் போராட்டம் குறித்து ரஜோரி காவல் கண்காணிப்பாளர் சவுத்ரி முகம்மது அஸ்லாம் கூறுகையில் "உள்ளூர் மக்களின் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது" என்றார். ரஜோரி காவல் நிலைய ஆய்வாளர் கூறுகையில், "துப்பாக்கிச்சூடு நடந்த ராணுவ முகாம் அருகே அதிக அளவிலான பொதுமக்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சிலர் ராணுவ முகாம் மீது கல்லெறிந்துள்ளனர்" என்றார்

சம்பவம் குறித்து ராணுவம் தரப்பில் தெளிவான விளக்கம் கொடுக்கப்படாத நிலையில், இந்திய ராணுவத்தின் அதிகாரபூர்வ ட்விட்டர் பக்கத்தில், "அன்று(16) காலையில் ரஜோரி அருகே உள்ள ராணுவ மருத்துவமனைக்கு அருகே அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். ராணுவ முகாம் அருகே காவல் துறையினர், பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள் குவிந்துள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## செயற்கை கருப்பை மூலம் ஆண்டுக்கு 30,000 குழந்தைகள் சாத்தியம் என்று சொல்லும் நிறுவனம்

பெண்களின் கருவறை போலவே செயற்கையாக உருவாக்கப்படும் கருப்பை வசதி மூலம் வருடத்திற்கு 30.000 குழந்தைகள் வரை பிறக்கவைக்க முடியும் என்று எக்டோ லைப் (நுஉவழடுகைந) என்ற தனியார் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இதுதான் உலகில் செயற்கையாக உருவாக்கப்பட்ட முதல் கருவறை நிறுவனம் என்றும் கூறப்படுகிறது. எக்டோலைப் நிறுவனம் பெர்லினை தலைமையகமாகக் கொண்ட உயிரி தொழில்நுட்பவியல் நிறுவனம். இந்த நிறுவனம்தான் உலகின் முதல் செயற்கை கருப்பை முறையில் குழந்தையை உருவாக்கும் முறையை அறிமுகப்படுத்துகிறது. பெண்களின் கருப்பை போலவே செயற்கையாக உருவாக்கப்படும் கருப்பை பெட்டிகள் மூலம் வருடத்திற்கு 30.000 குழந்தைகளை உருவாக்க முடியும் என்று இந்த நிறுவனம் கூறுகிறது.

இதில் உள்ள ஒவ்வொரு செயற்கை கருப்பை பெட்டிகளும் குழந்தையின் இதயத் துடிப்பு, வெப்பநிலை, ரத்த அழுத்தம், சுவாசம் உள்ளிட்ட முக்கிய உயிர்காக்கும் அம்சங்களை கண்காணிக்கும் சென்சார்களை கொண்டுள்ளன. இது தொடர்பான வீடியோவையும் எக்டோலைப் நிறுவனம் வெளியிட்டுள்ளது. மக்கள் தொகை தொடர்ந்து குறைந்து கொண்டிருக்கும் ஜப்பான், பல்கேரியா மற்றும் தென் கொரியா நாடுகளுக்கு இது பெரிதும் உதவும் என்றும், புற்றுநோய் மற்றும் பிற உடல் சிக்கல்களால் கருப்பையை இழக்கும் பெண்களுக்கு செயற்கை முறையில் குழந்தை உருவாக்கும் முறை ஒரு தீர்வாக அமையும் என்றும் எக்டோ லைப் தெரிவிக்கிறது. வாடகைத் தாய், செயற்கை கருவூட்டல் தற்போது வியாபார மயமாகியுள்ள சூழலில் எக்டோ லைப்பின் இந்த அறிவிப்பு சமூக வலைதளங்களில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இது எதிர்காலத்தில் நிச்சயம் சாத்தியமாகும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



## மலேசியா: திடீர் நிலச்சரிவில் சிக்கிய 51 பேர்

மலேசியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. கோலாலம்பூர், மலேசிய நாட்டின் தலைநகர் கோலாலம்பூர் அருகே பதங்கலி என்ற நகரில் தனியார் வேளாண் பண்ணை உள்ளது. இந்த வேளாண் பண்ணை அருகே கூடாரம் அமைத்து பலர் தங்கிருந்தனர். இந்நிலையில், இந்த வேளாண் பண்ணையில் அன்று(17) அதிகாலை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் 79 பேர் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் நிலச்சரிவில் சிக்கிய 26 பேரை உயிருடன் மீட்டனர். ஆனால், இந்த நிலச்சரிவில் 2 பேர் உயிரிழந்தனர். ஆனால், நிலச்சரிவில் 51 பேர் மண்ணுக்குள் புதைந்துள்ளதால் அவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. 50-க்கும் மேற்பட்டோர் மண்ணுக்குள் புதைந்துள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

## ஜேர்மன் ஹோட்டலில் 52 அடி உயரமான மீன்தொட்டி உடைந்தது: வீதியில் வெள்ளம்

ஜேர்மனின் பேர்லின் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பிரமாண்ட மீன்தொட்டி (அக்வாரியம்) அன்று(16) அதிகாலை உடைந்தது. இதனால் ஹோட்டலிலிருந்து பெருமள நீர் கசிந்ததன் காரணமாக அருகிலுள்ள வீதியொன்று மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

பேர்லின் நகர மத்தியிலுள்ள ரெடிசன் ப்ளூ ஹோட்டலில் (Radisson Blu hotel) இந்த பிரமாண்ட கடல்வாழ் உயிரினங்களின் தொட்டி அமைக்கப்பட்டிருந்தது. உருளைவடிவமான இம்மீன் தொட்டிக்கு அக்வாடோம் (AquaDom) எனப் பெயரிடப்பட்டிருந்தது.

16 மீற்றர் (52 அடி) உயரமான இக்கண்ணாடித் தொட்டி ஒரு மில்லியன் லீற்றருக்கும் அதிகமான லீற்றர்நீரைக் கொண்டிருந்ததுடன், அதில் சுமார் 1500 மீன்கள் வளர்க்கப்பட்டன. அன்று(16) காலை 5.50 மணியளவில் இம்மீன்தொட்டி உடைந்தது. இதனால் ஹோட்டலிலிருந்து லட்சக்கணக்கான லீற்றர் நீர் ஹோட்டலிலிருந்து கசிந்து வெளியேறியது. வீதியில் பெருமளவு நீர் புகுந்ததால், நிலைமையைக் கட்டுப்படுததுவத்றக நூற்றுக்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் அனுப்பப்பட்டதாக பேர்லின் தீயணைப்புச் சேவை தெரிவித்துள்ளது.






























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 18.12.2022 அன்று வெளியிடப்பட்டது.